பக்கங்கள்: பதினாறு +II=18

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 05 திங்கட்கிழமை (21.09.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 299

# வன்னி அகதிகள் மீள் குடியேற்றம்; இந்தியாவும் கடும் அதிருப்தி!

## நேரடியாகவும் கடித மூலமும் அழுத்தம்

கொழும்பு, செப்ரெம்பர் 21

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள அகதிகளை விரைவாக மீளக் குடியேற்றாமல் தொடர்ந்தும் முகாம்களிலேயே தடுத்து வைத்திருக்கின்றமை தொடர்பில் இந்தியாவும் கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது.

இந்திய அரசுத் தரப்பின் இந்த அதிருப்தியை இலங்கைக்கான அந்நாட்டுத் தூதர் அலோக் பிரசாத், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரியப்படுத்தியிருக்கிறார் என்றும் - அதே வேளை, இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் வன்னி அகதிகள் விடயத்தில் புதுடில்லி கொண்டுள்ள கரிசனைகளைக் கடிதம் மூலம் இலங்கை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார் - என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 ஊடாக நாளை பாடநூல்கள்

கொழும்பு, செப் .21

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள் ஏ-9 பாதையூடாக நாளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இத்தகவலைத் தெரிவித்தார்.

23 லொறிகளில் 10 லட்சம் பாடநூல்கள் எடுத்துச்செல்லப்படுகின்றன. இதற்கு 108 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (1)

## முகாம்களில் பாரிய மனிதப் பேரவலம்; விரைவில் தலைவிரித்தாடும் சாத்தியம்

### தொண்டு நிறுவனங்கள் எச்சரிக்கின்றன

கொழும்பு, செப். 21

வவுனியா உள்ளிட்ட இடைத்தங்கல் முகாம்களில் பாரிய மனிதப் பேரவலம் ஏற்படக் கூடும் என்று அங்கு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தொண்டு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மக்களைப் பாதுகாப்பதற்கு காத்திரமான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கையை வலியுறுத்துமாறு தொண்டு நிறுவனங்களால், ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைக் கிளைப் பொறுப்பாளர் நீல் பூனேயிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் புலிகளுக்கு பயிற்சி வழங்கினார்களா என்று விசாரணை

கொழும்பு, செப். 21

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ரஷ்ய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை இரகசியமான முறையில் அழைத்து வந்து விடுதலைப் புலிகளுக்கு பயிற்சி வழங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தனிப்பட்ட மெய்ப் பாதுகாவலர்களுக்கு ரஷ்ய அதிகாரிகள் பயிற்சி (16 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் - I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான கணிதம் - I பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்

## வவுனியா மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்த ஆயிரம் குடும்பங்கள் நேற்று மீளக்குடியமர்த்தப்பட்டன

வவுனியா, செப். 21

வவுனியா மாவட்டத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 5,320 பேர் நேற்று மீளக்குடிய மர்த்தப்பட்டனர்.

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் எல்லைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் நீண்டகாலமாகக் தங்கியிருந்த இவர்கள் தமது சொந்தக் கிராமங்களில் நேற்று மீளக் குடியேற்றப்பட்டனர்.

வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்மின் தேர்தல் தோல்விக்கு நோர்வே ஈழத் தமிழர்களே காரணமாம்



கொழும்பு, செப்.21

நோர்வேயில் நடைபெற்று முடிந்த தேர்தலில் சோசலிஸ்ட் லெவ்ட் கட்சி பின்னடைவைச் சந்தித்தமைக்கு அக்கட்சியின் முக்கிய உறுப்பினரான எரிக் சொல்ஹெய்மை நோர்வேத் தமிழர்கள் ஆதரிக்காதமையே காரணம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த தேர்தலில் எரிக் சொல்ஹெய்ம் அங்கம் வகிக்கும் 'சோசலிஸ்ட் லெவ்ட்'கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்தது.

அக்கட்சிக்கு 6.1 வீத வாக்குகளே கிடைத்துள்ளன. 2005 இல் கிடைத்ததை விட இது 8.8 வீதம் குறைவானதாகும். நான்கு ஆசனங்கள் மாத்திரமே அக்கட்சிக்கு கிடைத்தன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு வீரர்கள் - இந்திய வீரர்கள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டி விரைவில் யாழ்ப்பாணத்தில்

### நேற்றைய விழாவில் அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.21

சர்வதேச மட்டத்தில் வடக்கு வீரர்களுக்கு வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றேன். அதன் முதற் கட்டமாக இந்தியவீரர்களும் வடக்கு வீரர்களும் பங்கேற்கும் போட்டி ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து வருகின்றேன். (16 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி மிரட்டல்கள் காரணமாக யுனிசெவ் அதிகாரி எல்டர் 3நாள்களுக்கு முன்னரே இங்கிருந்து வெளியேறினார்!



கொழும்பு, செப். 21

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதிய (யுனிசெவ்)இலங்கைப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டருக்கு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட தொலைபேசி மிரட்டல்களை அடுத்து, அவர் உரிய நாளுக்கு முன்னதாகவே கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பை விட்டு வெளியேறி விட்டார் எனத் தெரி விக்கப்படுகிறது.

இன்றுவரை நாட்டில் தங்கியிருப்பதற்கு அவருக்கு அனுமதி இருந்தது.

இடம்பெயர்ந்த மக்களின் - குறிப்பாக பெண்கள், சிறுவர்களின் நிலை தொடர்பாக ஊடகங்களுக்கு ஜேம்ஸ் எல்டர் தெரிவித்த கருத்துக்களை அடுத்து, அவரா (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பான அமெரிக்காவின் அறிக்கை இன்று வெளியாகும்

கொழும்பு, செப். 21

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம் பெற்றமையை நேரில் கண்ட பலரின் வாக்குமூலங்கள் அடங்கிய யுத்தக் குற்ற அறிக்கையை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இன்று வெளியிடுகிறது.

இலங்கைக்கான அமெரிக்காவின் எதிர்கால நிதியுதவியை தீர்மானிக்கக் கூடிய குறித்த அறிக்கையை அமெரிக்க காங்கிரஸின் மதிப்பீட்டிற்காக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு சமர்ப்பிக்கின்றது.

மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமான நிலைவரத்தை சரிசெய்வதற்காகவே குறிப்பிட்ட நடவடிக்கைகளை இலங்கை (16 ஆம் பக்கம் பார்க்க)

## 10 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 ஈழ அகதிகள் செங்கல்பட்டில் உண்ணாவிரதம்

காஞ்சிபுரம்.செப்.21

செங்கல்பட்டு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழஅகதிகள் நாற்பது பேர் காலவரையற்ற உண்ணா விரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர் என பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

பத்து வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள 40 பேர் தமது விசாரணைகளை விரைவாக முடித்து தீர்ப்பை வழங்குமாறு கோரி (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# IIS கணனிக்கற்கை நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 3:-23-09-2009 } காலை 10.00மணி
பிரிவு 4:-26-09-2009 }

A/L 2009 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே விசேட பிரிவுகள் ஆரம்பம்

**Admissions Open**
**September 2009**

இரண்டு Diploma கணனிக்கற்கை நெறிகளுக்கு பதிவினை மேற்கொள்ளும் மாணவர்கள் 3வது Diploma கற்கை நெறியினை முற்றிலும் இலவசமாக கற்கும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கின்றீர்கள் (நிபந்தனைக்கு உட்பட்டது)





| Diploma Courses | |
|---|---|
| Courses | Duration |
| Diploma in Microsoft Office | 4Months |
| Diploma in Desktop Publishing | 3Months |
| Diploma in Internet Technology | 4Months |
| Diploma in Hardware Technology | 4Months |
| Diploma in Computer Programming | 4Months |
| Diploma in Computerized Accounting | 4Months |
| Diploma in Audio & Video Editing | 4Months |
| Diploma in Eng Drawing & AutoCAD | 4Months |
| Diploma in DataBase Management | 4Months |
| Diploma in Visual Programming | 4Months |
| **Certificate Courses** | |
| Certificate in AutoCAD | 2Months |
| Certificate in Java Programming | 2Months |
| Certificate in Visual Basic Programming | 2Months |

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
**100,Clock Tower Road,Jaffna**
**T.P 021 222 2831**


# கண்ணீர்ப் பூக்கள்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமை யாளரும், எமது சங்க நிர்வாக உறுப்பினரும் ஆகிய க.சந்திரகுமார் அவர்களின் அன்புத் தந்தை

## சரவணமுத்து கனகரத்தினம்

அவர்கள் 19.09.2009 சனிக்கிழமை மரணம் அடைந்ததினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ப.நோ.கூ.சங்கப் பணியாளர்,
சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## *சீதாலெட்சுமி சிதம்பரநாதன்*

(6 ஆம் வட்டாரம், மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீதாலெட்சுமி சிதம்பரநாதன் நேற்று (20.09.2009) ஞாயிற்றுக்கிழமை இறைபதம்அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் - சிவயோகம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் அருணகிரிநாதன், பத்மநாதன் (பாலு), சத்தியபாமா (மணியம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லெட்சுமியம்மா, முத்துலெட்சுமி, லிங்கப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற வைகுந்தவாசன் மற்றும் துளசிவாசன், திருப்பதிவாசன், சிறிரங்கவாசன், சத்தியநாராயணன், உருத்திராவதி, லெட்சாவதி, காயஷ்சிறி, தாட்ஷாயினி, திருமகள், காலஞ்சென்ற திருவருள் மற்றும் திருவாசுகி, திருவருட் செல்வன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.9, தேவாலய வீதி,
முதலாம் குறுக்குத் தெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
லி.சத்தியபாமா (மணியம்மா)
(சகோதரி).

## திருமதி தனபாலசிங்கம் அன்னலட்சுமி

(சின்னமணி)



தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் அன்னலட்சுமி (சின்னமணி) 19.09.2009 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - செல்லி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சீனியர் - லட்சுமி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும். சிவகுமார், சந்திரகுமார் (லண்டன்), சுபாஜினி, அகலினி, குகந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கல்பனா, விசி, கஜேந்திரகுமார், இராசபரன், சுவேந்தினி ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்றவர்களான இரத்தினம், தங்கம்மா, சரஸ்வதி, புலவர் மற்றும் நவரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணி, இராசமணி, புஸ்பமலர், இன்பராணி, சுலோசனா, திலகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் டினுஜன், சாருஜன், சர்ணுஜன், நிலுஜன், தீபகரன், கனுசன் , கனுசியா, ரஜீப், லகீஸ், பிரவீன், மரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காந்திஜி சனசமூக நிலைய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# இன்றைய நிகழ்வுகள்

கைதடி, செப். 21

கைதடி படைப்பிரிவினரால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம்இன்று திங்கட்கிழமை கைதடி சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் கைதடி சரஸ்வதி வி.கவும் கைதடி மத்தி வளர்மதி வி.கவும் மோதுகின்றன. இறுதி நிகழ்வாக படையினரின் ஏற்பாட்டில் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (1-288)

* * *

வடமராட்சி, செப். 21

புலோலி கிழக்கு கிராம சேவையாளராக நீண்ட காலம் பணியாற்றி வல்லிபுரம் கிராம சேவையாளராக இடமாற்றமாகிச் செல்லும் தி.கயேந்திரராசாவுக்கு பிரிவுபசாரமும், கற்கோவளம் கிராம சேவையாளராகக் கடமையாற்றி புலோலி கிழக்கு கிராம சேவையாளராகப் பொறுப்பேற்கும் கந்தசாமிக்கு வரவேற்பு உபசாரமும் இன்று 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் புலோலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுகளில் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை உதவிப்பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (1-236)

* * *

நவாலி, செப். 21

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபை முன்பள்ளிகளின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வலி. தென் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி க.கலிஸ்ரா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ கலந்து கொள்வார். (1-100)


## ஹலோ யாழ் கன்டோஸ்

தரமான முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது.

விநியோகஸ்தர்:
**அபிராமி களஞ்சியம்**
*பெற்றோல் நிலையம் அருகில்*
*நெல்லியடி.*

## ராஜ் திருமணசேவை

இந்து உயர் கௌரவ, குடும்பம், 35 வயது, பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற பொறியியலாளர் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

இந்து உயர் கௌரவ குடும்பம் 28 வயது, செவ்வாய்க் குற்றம் பூசநட்சத்திரம், கனடா பிராஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

இந்து உயர் கௌரவ குடும்பம் 31 வயது மூலநட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற தாரக் குற்றமுடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

இந்து உயர் கௌரவ குடும்பம் 53 வயது, தாரக்குற்றமுடைய, மூலநட்சத்திரம், சுவிஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு, தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு : M.ஜெயரத்தினம்,
ராஜ் திருமணசேவை
*158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*
*021 3735980, 0774745647*

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில, By:விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.) (89060)

## தேவை

கல்வி வெளியீட்டு நிறுவனம் ஒன் றிற்கு கணனி தட்டெழுத்தாளர் (பெண்), அலுவலகத்தில் எழுத்து வேலை செய்யக் கூடியவர் (பெண்), அச்சக வேலை தெரிந்தவர் (பழக விரும்புபவர்) (பெண்) தேவை. சுய விவரத்துடன் விண்ணப்பிக்கவும். நேரிலும் வரலாம்.
(முன் அனுபவம் உள்ளவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்கப்படும்)

156, நாவலர் வீதி, யாழ்.
தொ.பே.: 021 222 7442


# நன்றி தெரிவித்தல்

கடந்த (13.09.2009) ஞாயிற்றுக்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறவிடப்பட்ட தங்க நகை ஒன்றை (நெக்லஸ்) சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தினர் கண்டெடுத்து தகுந்த ஆதாரம் பெற்று எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். அப்பாலர் பாடசாலைத் தலைவர், செயலாளர், மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. திருமதி விமலசோதி, காளி கோவிலடி, மல்லாகம்.


# British Business School

மானிப்பாய், சுன்னாகம், புலோலி, நல்லூர்.

விஜயதசமியன்று வித்தியாரம்பம் | 2010 இற்கான புதிய அனுமதிகள்

வயது 2 முதல் 5 வரையிலான சிறார்களுக்கான ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை

விஜயதசமியன்று காலை 9 மணிமுதல் மானிப்பாய், சுன்னாகம், புலோலி, நல்லூர் ஆகிய கிளைகளில் ஏடு தொடக்கப்படும்.

★ 252, ஆலடிச் சந்தி, யாழ்.வீதி, மானிப்பாய்.
★ புதிய நீதிமன்றம் அருகில், K.K.S. வீதி, மல்லாகம்.
★ ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை.
★ 34 சட்டநாதர் வீதி, நல்லூர்.

**British Business School**
140, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.:021 222 5796


# கண்ணீர் அஞ்சலி



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி அ. லிங்கராசா அவர்களின் பாசமிகு தந்தையார்

## சிவசம்பு செந்தில்நாதன்

(இலங்கை வங்கி முகாமையாளர்)

அவர்களின் திடீர் மறைவு குறித்து மிக்க துயரடைவதுடன், அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## *சிவசம்பு செந்தில்நாதன்*

(முகாமையாளர், Bank of Ceylon, Jaffna)



அளவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு செந்தில்நாதன் நேற்று (20.09.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரெத்தினம் - இரத்தினபூபதி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவமலரின் அன்புக் கணவரும், அபிராமி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மயூரன் (லண்டன்), நிவேதிதா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, 2010 வர்த்தகப்பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கராஜின் (ஆசிரியர், திருக்குடும்பக் கன்னியர்மடம்) அன்பு மாமனாரும் யருசனின் அன்புப் பேரனும், சிவநாதன் (சாவகச்சேரி), லோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவதாசன் (கொழும்பு), சிவரஞ்சினி (கனடா), புவிராஜ் (கொழும்பு) மற்றும் தியாகேஸ்வரி (சாவகச்சேரி), லோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி,
பிள்ளைகள், மருமகன்.
021 222 5205

566, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ் / இந்து ஆரம்ப பாடசாலை அருகாமையில்) (89063)

## *திருமதி கந்தவனம் தங்கம்மா*



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் தங்கம்மா 19.09.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும், கந்தவனத்தின் அருமை மனைவியும், சிவப்பிரகாசம் (பிரதம முகாமை உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம் வலிகாமம்), சிவஞானேஸ்வரன் (பிரான்ஸ்), சந்திரிகா (பிரான்ஸ்), பாலறட்ணம் (ஓய்வுபெற்ற அதிபர், அளவெட்டி சதானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரினேஷ், நவதர்ஜினி, செந்தில்குமரன் (பிரான்ஸ்), பார்த்தசாரதி, சாயிசன், மனோராஜ் (பிரான்ஸ்), சிவதாட்சாயினி (பிரான்ஸ்), ஹேமதாரணி (லித்வேனியா), ஹேமினி, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கப்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்மனை,*
*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம்.* (89065)

தகவல்:
க.சிவப்பிரகாசம் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முற்றி வரும் நெருக்கடிகள்

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இறுதி வெற்றியீட்டிய களிப்பில் மார்தட்டிக் கொண்டாடிக் கொண்டிருந்த கொழும்பு அரசுக்கு உண்மையான பரீட்சைக் காலம் - சோதனை நேரம் - இந்த மாதத்தின் இறுதி வாரங்களாக இருக்கக்கூடும் என இப்பத்தியில் சில நாள்களுக்கு முன்னர் ஆரூடம் கூறியிருந்தோம். அது சரி தான் என்பது போல விடயங்கள் நடந்தேறி வருகின்றன.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதிச் செயலாளரின் வருகை, கொழும்பு அரசுக்கு, அதன் தற்போதைய நிலைப் போக்கின் தாற்பரியங்களையும் சாதக பாதகங்களையும் நன்கு விளக்கியிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் ஆழ்ந்த சிரத்தையை வெளிப்படுத்தும் பிரத்தியேகச் செய்தியையும் - கடிதத்தையும் - அவர் எடுத்து வந்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

போதாக்குறைக்குத் தனது இலங்கை விஜயத்தின் முடிவில் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் வெளிப்படுத்திச் சென்ற கருத்துகளும் கொழும்பின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது திண்ணம்.

* விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப் பட்டவை எனக் கூறப்படும் உரிமை மீறல் பிரச்சினைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து உண்மையைக் கண்டறியுங்கள்!

* யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புக்கூறும் விடயத்தை உறுதிப்படுத்துங்கள்!

* உண்மையைக் கண்டறிதல் மற்றும் பதிலளிக்கும் கடப்பாடு தொடர்பாக தேசிய மட்டத்திலான நடவடிக்கையை இலங்கை முன்னெடுக்க வேண்டும். அது அதிக சிரத்தையுள்ள விடயமாகவும், சுயாதீனமானதாகவும், பக்கச்சார்பற்றதாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

- இதுவே ஐ.நாவின் நிலைப்பாடு என்பது இப்போது வெளிப்படையாக கொழும்புக்கு உணர்த்தப்பட்டு விட்டது.

புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது படை யினரின் நடவடிக்கைகள் காரணமாக ஓர் அப்பாவி சிவிலியன் கூடப் பாதிக்கப்படவேயில்லை என்ற அரசியல் சுத்து மாத்து' பேச்சுக்களையும் அறிவிப்புகளையும் அப்படியே ஏற்க சர்வதேச சமூகம் அப்படி ஒன்றும் முட்டாள்தனமானது அல்ல என்பதையே ஐ.நாவின் இந்தக் கருத்துகள் பிரதிபலிக்கின்றன.

''நடந்து முடிந்த தவறுகளை கம்பளத்துக் கீழ் தள்ளி மூடிமறைக்க முயல்வது குறுக்கு வழியாக - வசதியாக - இருக்கக்கூடும். ஆனால், அதற்காகப் பின்நாளில் அதிக விலை செலுத்த வேண்டி நேரலாம்.'' - என்றும் ஐ.நா.அதிகாரி, அரசுக்கு எச்சரிக்கைப் பாணியில் ஆலோசனை கூறியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நடந்துமுடிந்த அனர்த்தங்களுக்கு - பேரழிவுகளுக்கு - பொறுப்புக்கூறும் கடப்பாட்டை உதாசீனம் செய்து கொண்டு காரியமாற்றுவது அல்லது விடயங்களைக் கொண்டிழுப்பது சாத்தியமானதல்ல என்பதைக் கொழும்புக்கு அழுத்தமாகப் புரியவைக்கும் செயற்பாட்டில் மேற்குலகு தீவிரமாக இருப்பதும் வெளிப்படையானது.

நடந்து முடிந்த யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இன்று வெளியிடவிருக்கும் அறிக்கையும் கூட இத்தகைய பொறுப்புக் கூறும் தடப்பாட்டைக் கொழும்புக்கு வற்புறுத்துவதன் மூலம் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை அம்பலப்படுத்த முயற்சிப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அறிக்கை கொழும்புக்குத் தரப்போகும் அதிர்ச்சி எவ்வாறானதாக இருக்கும் என்பது இன்றிரவு தெரியவந்து விடும்.

இதேவேளை, அரசுப் படைகள் தொடுத்த யுத்தம் காரணமாக வீடு, வாசல்கள், உடைமைகளைத் துறந்து, உறவுகளைத் தொலைத்து, ஏதிலிகளான சுமார் மூன்று லட்சம் அகதிகளைத் தொடர்ந்தும் நலன்புரிமையங்களின் பெயரில் இயங்கும் முகாம்களில் தடுத்து வைத்திருக்கின்றமை சம்பந்தமாக சர்வதேச கரிசனை அதிகரித்து வருகையில், இவ்விடயத்தில் தனது பொறுமை எல்லை மீறுவதை சீற்றத்துடன் கொழும்புக்கு எடுத்துரைக்கப் புதுடில்லி தீர்மானித்து அதன்படி செயற்படுவதும் அவதானிக்கத்தக்க முக்கிய விடயமாக இருக்கின்றது.

இடம்பெயர்ந்த அகதிகள் மீளக் குடியேற அனுமதிக்கப்படாமல் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படும் நிலைமை நீடிக்குமாயின், அது இந்தப் பிராந்தியத்தின் ஸ்திர நிலைக்கு அச்சுறுத்தலாகும் என்று காட்டமாகக் கொழும்புக்கு புதுடில்லி குறிப்பிட்டிருப்பதில் அர்த்தங்கள் அனேகம் பொதிந்து கிடக்கின்றன.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில், இலங்கையில் மனித உரிமை பேணல் நிலைமையில் அதிருப்தி கொண்டுள்ள மேற்குலகு - குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் - கொழும்பின் அத்தகைய எதேச்சாதிகாரப் போக்குக்கான தண்டனையாக, இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதியாகும் தைத்த ஆடைகளுக்கு இதுவரை தான் வழங்கி வந்த 'ஜி.எஸ்.பி.பிளஸ்' என்ற விசேட வரிச்சலுகையை வெட்டி, கொழும்புக்கு பெருத்த பொருளாதார அழுத்தத்தை கொடுக்கத் தயாராகிவிட்டது என்கின்றன தகவலறிந்த வட்டாரங்கள்.

நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கையாளும் 'ராஜபக்ஷ அன்ட் பிறதர்ஸ்' கம்பனி, முற்றிவரும் இத்தகைய நெருக்கடிகளை எப்படிச் சமாளிக்கப்போகின்றது என்பது அடுத்துவரும் வாரங்களில் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

# கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை சிறந்தவையாக்குவதே 'இசுறு' தி...

## இதன் வேலைத்திட்டப் பணிப்பாளர் அநுர தி...

யாழ்ப்பாணம், செப்.21

இலங்கையிலுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை அப்பிரதேசத்தின் சிறந்த பாடசாலைகள் ஆக்குவதே 'இசுறு' திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் 'மஹிந்த சிந்தனை'யின் கீழ் 'இசுறு' பாடசாலைகள் உருவாக்கப்படுகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் முதற்கட்டமாக மாவட்டத்திற்கு ஆறு பாடசாலைகள் என்ற வீதத்தில் 150 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வகையில் வடக்கு மாகாணத்தில் 30 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு துரித வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 'இசுறு' வேலைத் திட்ட அங்குரார்ப்பண கருத்தரங்கு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய அநுர திஸநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்விற்குக் கல்லூரி முதல்வர் ஆறு.திருமுருகன் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய அநுர திஸநாயக்கா:-

நாம் 30 வருடங்களாக ஒருவருடன் ஒருவர் போரிட்டோம். இப்பொழுது போர் ஓய்ந்து விட்டது. இனி அபிவிருத்திப் பாதையில் சகோதரத்துவத்துடன் கைகோர்த்துச் செல்ல வேண்டியுள்ளது.

பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள், அதிபர் ஆகிய அனைவரும் இணைந்து செயற்படுவதிலேயே 'இசுறு' திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

கட்டடங்களைக் கட்டுவதன் மூலம் மட்டும் ஒரு பாடசாலையைச் சிறந்ததாகக் காட்ட முடியாது. பரீட்சைகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகும் -என்றார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய 'இசுறு' திட்டக் கருத்தரங்கு இணைப்பாளர் ஆர்.ரஞ்சித் குமாரஸ்ரீ 'இசுறு' என்ற சொல் இஸ் (உள்ளம்) உற (உடல்) என்னும் இரு சொற்களின் இணைப்பாகும். மாணவரின் உடல் உள வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டமே ''இசுறு'' திட்டமாகும். இன்று கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு புறம் குறைந்து செல்கிறது.

ஏறத்தாள 2 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் நூறிலும் குறைந்த மாணவர்களைக் கொண்டவையாக உள்ளன. மறுபுறம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட நகரப்புற பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

இதனைத்தடுப்பதற்காக இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தி அவற்றை நோக்கி மாணவர்களை ஈர்ப்பதற்காகவே ''இசுறு'' பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு பெருந்தொகை நிதியில் அவை அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இவ்வகையில் யாழ்.மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகள் 'இசுறு' பாடசாலைகளாகத் தெரிவுத்செய்யப்பட்டுள்ளன.

இலங்கை அரசின் எதிர்காலக் கல்வித் திட்டங்களின் முதன்மையான கவனம் 'இசுறு' பாடசாலைகளிலேயே உள்ளது.

இப் பாடசாலைகள் ஜனாதிபதி அலுவலகத்தால் நேரடியாகக் கண்காணிக்கப்படுவதுடன் கல்வி அமைச்சினாலும் கண்காணிக்கப்படுகின்றன. எனவே அதிபர், ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டியுள்ளது - என்றார்.

இந்நிகழ்வில் 'இசுறு' திட்ட முகாமையாளர் எஸ்.எல்.எம்.டி.பியசேன, வடமாகாண இணைப்பாளர் மகேந்திரன், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.

கருத்தரங்கின் நிறைவில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (203-55-86)

# நிர்மாணப் பயிற்சியளிப்பு நிறுவனம் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்கின்றது

யாழ்ப்பாணம், செப்.21

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் நிர்மாணப் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனம் நிர்மாணப்பயிற்சி, ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இந்நிறுவனம் மேலதிகமாக நிர்மாணப்பயிற்சி, நிதிசார் வளங்களையும் மற்றும் வேறு வளங்களையும் கொண்டிருக்காத குறைந்த மட்டத்தில் உள்ள சிறிய அளவிலான ஒப்பந்தவேலைகளான கட்டடங்கள், நெடுஞ்சாலைகள், நீர்விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு, நீர்ப்பாசனம் மற்றும் நிலவடிவமைப்பு, சேறுவாருதல் மற்றும் நிலமீட்சி, உருக்குப்புனைவு, கூாற்றுச்சீராக்கல் மற்றும் குளிரூட்டல், மின் எந்திரவியல், தொலைத் தொடர்பு, உள்ளக அலங்கரிப்பு, இயற்கை வனப்பூட்டல் , ரெரஸோ தரைத்தளமிடல், தரையோடு பதித்தல், கிரனைட் வேலை, பார்குவட் வேலை, தச்சுத் தொழில் மற்றும் மூட்டுவேலை, அலுமினிய வேலை, குழாயொட்டுதல் போன்ற சிறிய வேலைகளை செய்பவர்களை ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் சிறிய அளவிலான ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் கடந்த 8ஆம் திகதி தொடக்கம் பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களை ஐந்து லட்சம் ரூபா செலவுக்குட்பட்ட வேலைகளுக்கு ஒப்பந்தம் செய்யலாம் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களைத் தமது கிராம உத்தியோகத்தரின் சிபார்சுடன் பிரதேச செயலர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு தே. அடையாள அட்டைப்பிரதி, வியாபாரப் பிரதி என்பவற்றுடன் பதிவுக்கட்டணமாக 815 ரூபா செலுத்தி தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். இவை தொடர்பான செயற்பாடுகள் தற்போது பிரதேச செயலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203- 201)

# தென்மராட்சி வலயத்துக்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப்.21

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் நேற்று தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்திற்கு விஜயம் செய்தனர்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், உதவிச் செயலாளர் தி.பொன்னம்பலம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர், கணக்காளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வலய உத்தியோகத்தர்களுக்கான வலய நிலை செயலாற்றுகை முன்னேற்ற மதிப்பீடு பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

(203-207)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 06 | 22.09.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ. 09.18 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | பி.ப. 03.07 வரை |
| சுபநேரம்: | 10.32 - 12.02 |
| ராகுகாலம்: | 03.02 - 04.32 |

# தென்மராட்சி வலயத்துக்கு சொந்தக் கட்டடம்

யாழ்ப்பாணம், செப். 21

தென்மராட்சிக் கல்வி வலயத்திற்கு சொந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் கட்டடம் நிர்மாணிக்க 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து தரப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வலயக்கல்வி அலுவலகத்திற்கு விஜயம் செய்தபோது இத்தகவலைத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

சாவகச்சேரி, ஹென்ஸ்மன் வீதியில் வலயக் கல்வி அலுவலகத் திற்கென காணி கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(203-207)

# சர்வதேச சமாதான தினத்தை ஒட்டி யாழ்ப்பாணத்தில் இன்று விசேட நிகழ்வுகள்

வண்ணை.செப்.21

யாழ்.சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகம் சர்வதேச சமாதான தினமான இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி மேற்கு, சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் பணியக இயக்குநர் அருட் பணி பிரவீன் மகேசன் (அ.ம.தி.) அடிகள் தலைமையில் 'நல்லிணக்கத்தை நோக்கி..' என்னும் தொனிப்பொருளில் மாபெரும் கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடத்துகின்றது.

குடாநாடு தழுவிய அளவில் கிராமங்கள் தோறும் சிறுவர், சிறுமிகளிடையே கட்டுரை, ஓவியம், நாட்டுக் கூத்து மற்றும் நாடகம், வில்லுப்பாட்டு ஆகியவற்றினதும், நடத்திய தடகளப் போட்டியில் வெற்றிவாகை சூடிக் கொண்டவர்களுக்கும் நிகழ்வில் பரிசளிப்பும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக அமல்மரித்தியாகிகள் மாகாண முதன்மை ஆலோசகர் அருட்திரு.எப்.எல்.என்.குரூஸ் அடிகள் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தேசிய சமாதானசபை இயக்குநர் கலாநிதி ஜெகான்பெரேரா, வணக்கத்துக்குரிய வெல்முவபத்தன பிரியதர்சன தேரர் ஆகியோர் கலந்துகொள்வர். கௌரவ விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அருட்திரு. ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். நிறைவாக சிறுவர், சிறுமியர் கலந்து கொள்ளும் 'இசையால் இணைவோம்' இன்னிசை கானங்கள் இடம்பெறும்.

# வலி.தென்மேற்கில் சனசமூகநிலையங்களுடன் கலந்துரையாடல்

சித்தன்கேணி.செப்.21

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான காலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு தலைமையலுவலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது சனசமூக நிலையங்களுக்கான சமாசத் தெரிவு, 2009 நன்கொடை வழங்கல், தேசியவாசிப்பு மாத போட்டிகள் விவரம் போன்ற பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் நிலையத்திலிருந்து தலைவர், செயலாளர் உட்பட நான்கு உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் திருமதி.பு.சிவலிங்கம் கேட்டுள்ளார். (1-112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண விளையாட்டுக் கோலாகலம் நேற்றுப் பூர்த்தி
# யாழ்ப்பாணம் சம்பியன்; வவுனியா, மன்னார் அடுத்த நிலையில்

யாழ்ப்பாணம், செப்.21

பார்வையாளர்களின் பெரும் ஆரவாரங்களுக்கு மத்தியில் யாழ். மாவட்ட அணி வெற்றி வாகைசூடி முதலிடத்தைக் கைப்பற்ற நிறைவு பெற்றது வடமாகாண விளையாட்டு விழா.



கடந்த மூன்று நாள்களாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

இரண்டாம் நாள் போட்டி முடிவுகளில் முன்னிலையில் இருந்த வவுனியா அணியை வீழ்த்தி 95 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்ட அணி முதலிடத்தைத் தட்டிச் சென்றது.

வவுனியா மாவட்டம் 62 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் 35 புள்ளிகளைப் பெற்று மன்னார் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

காலை 7 மணிக்கு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்கள் பி.ப. 3 மணிக்கு வருகை தர இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய இசைக்குழுவினர் அவர்களை மைதானத்துக்குள் அழைத்து வந்தனர். மைதானம் முழுவதும் பார்வையாளர்கள் நிறைந்து காணப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அரசாங்க அதிபர் கே.கணேஷ், வடமாகாண கல்வி மற்றும் கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் எல்.இளங்கோவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**கிராமிய மணத்துடன் ஆரம்பமாகின நிகழ்வுகள்**

இறுதிநாள் நிகழ்வின் முதல் நிகழ்வாக புங்குடுதீவு சுப்பிரமணியம் மகா வித்தியாலய மாணவிகளின் கிராமிய மணம்கமழும் மீனவ நடனம் நடைபெற்றது. மீனவ சமுதாயத்தின் வாழ்வைப் பிரதிபலிப்பதாக அவர்களின் நடனம் நிறைந்திருந்தது.

**200 மழலைகளின் உடற் பயிற்சிகள் பார்வையாளர்களை வசீகரித்தது**

அதனைத் தொடர்ந்து யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் சின்னஞ்சிறார்கள் 200 பேர் இணைந்து நாதஸ்வர கலைஞர் எம்.பி. பாலகிருஸ்ணன் குழுவினர் இசைக்கு வழங்கிய நடன உடற் பயிற்சிக் கண்காட்சி பார்வையாளர்களினை வசீகரித்ததுடன் பலரின் பாராட்டையும் பெற்றது.

# தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்கள் அரங்கேற்றம்; பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்த காட்சிகள்



தொடர்ந்து வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகள் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட இறுதிப்போட்டி நிகழ்வுகளும் நடைபெற்றன.

**ஹென்றியரசர் கல்லூரியினரின் சாகச உடற்பயிற்சிக் கண்காட்சி**

தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் நடை பெற்ற உடற்பயிற்சிக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் சாகசம் நிறைந்த உடற்பயிற்சிக் கண்காட்சியை வழங்கினர்.

வீரர்கள் வளையங்களின் ஊடாகப் பாய்ந்தும் குத்துக்கரணம் அடித்தும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினர்.

**பொய்க்காலாட்டத்தில் புத்துயிர் வழங்கிய சங்கானைக் கலைஞர்கள்**

யாழ்ப்பாணத்தில் அழிந்து வரும் தமிழ்ப் பாரம்பரிய கலைகளில் ஒன்றான பொய்காலாட்டத்திற்கு சங்கானைக் கலைஞர்கள் புத்துயிர் வழங்கியிருந்தனர். இக்கலைஞர்களின் ஆட்டம் பார்வையாளர்களின் பெரும் கவனத்தை ஈர்த்ததுடன் பாராட்டையும் பெற்றது. இக்கலைஞர்களுக்கு மட்டுமல்லாது இந்நிகழ்வையும் இணைத்துக் கொண்ட விளையாட்டுத் துறையினருக்கும் இப் பாராட்டுக்கள் உரியதாகும்.

**மயிர்க் கூச்செறிய வைத்த சிலம்பாட்டம்**

இந்நிகழ்வில் பருத்தித்துறையைச் சேர்ந்த சிறுவர்களும், இளைஞர்களும் இணைந்து வழங்கிய சிலம்பாட்டம் பார்ப்போரை மயிர்கூச்செறிய வைத்தது. சிலம்பு சுற்றியதுடன் அச்சிலம்பங்களின் இருபக்கங்களிலும் நெருப்பைக் கொளுத்தியவாறு ஒருவர்மீது ஒருவர் ஏறிநின்றும் சங்கிலிகளில் கொளுத்திய நெருப்பினை வாயில்வைத்து சுழற்றியும் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தளித்தனர்.



**அதிரன், நேசன் தமிழரசன்**

**அணிவகுத்தனர் மாவட்ட வீரர்கள்**

போட்டியின் இறுதி நிகழ்வாக பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதற்காக 5 மாவட்டங்களின் வீர, வீராங்கனைகளும் ஒன்றாக அணி வகுத்து மைதானத்தின் நடுப்பகுதியில் குழும, பரிசுகள் வழங் கப்பட்டன.

போட்டியின் ஆரம்ப நாளன்று அணிவகுத்த ஒழுங்கில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என ஒன்றாக அணிவகுத்து மைதானத்தின் நடுப்பகுதியில் குழும பரிசுகள் பிரதம விருந்தினர்களாக வருகை தந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோரால் வழங்கப்பட்டன.

## அடுத்த மாகாண விளையாட்டு விழா கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு மாகாணத்தில் அடுத்த விளையாட்டு விழா அடுத்த வருடம் கிளிநொச்சியில் நடைபெறும்.

வடக்கு மாகாண கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த மூன்று தினங்கள் இடம் பெற்று நேற்று முடிவடைந்த வடக்கு மாகாண விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வில் பேசுகையிலேயே அவர் இப்படி தெரிவித்தார்.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் வடக்கு மாகாண விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று முடிவடைந்தது. இந்த விளையாட்டு விழா மிகச் சிறப்பாகவும் அமைதியாகவும் இடம் பெற்றது. இதற்கு முழுமையாக ஆதரவு வழங்கிய சகலருக்கும் மாகாணசபை நன்றி கூறுகிறது -என்றார் அவர்.

(1-06)

# வடமாகாண விளையாட்டு விழாவில் இரண்டாம் நாள் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவில் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி முடிவுகள்.

**10,000 மீற்றர் ஓட்டம் (ஆண்கள்)**

ஏ.சசிகரன் (வவுனியா,),ரி.அன்ரனி (மன்னார்), என்.ஜி. ஈ.எஸ்.ஜெயதிலக (வவுனியா)

**(பெண்கள்)**

ஈ.எம்.சி.எல்.ஹேரத்(வவுனியா), எஸ். மேர்சி (யாழ்ப்பாணம்),எஸ்.எழிலரசி (வவுனியா)-

**நீளம் பாய்தல் (ஆண்கள்)**

ஏ. ரசீம்ராஜ் (யாழ்ப்பாணம்), ஏ.அமல்ராஜ் (யாழ்ப்பாணம்), எஸ். சர்மிளன் (வவுனியா).

**குண்டெறிதல் (ஆண்கள்)**

கே. வாகீசன் (யாழ்ப்பாணம்), எம்.பிரதீப் குமார் (யாழ்ப்பாணம்),ரி.றேகன் (வவுனியா).

**தட்டெறிதல் (பெண்கள்)**

ரி.அனுசா (வவுனியா), எஸ். கீர்த்திகா (யாழ்ப்பாணம்), ரி.முகுந்தா (வவுனியா)

**உயரம் பாய்தல் (பெண்கள்)**

வி. கவிதா (யாழ்ப்பாணம்), எஸ்.கீர்த்திகா (யாழ்ப்பாணம்), எஸ்.எம்.வனித்தா (மன்னார்).

**800மீற்றர் ஓட்டம் (ஆண்கள்)**

என்.நேசரூபன் (யாழ்ப்பாணம்), வி யோகேஸ்வரன் (மன்னார்), எஸ் சிவனேசன் (வவுனியா).

**பெண்கள்**

பி.கல்பனா(வவுனியா),ஆர். காவேரி (யாழ்ப்பாணம்), ஆர் அனுசியா (யாழ்ப்பாணம்)-

**மும்பாய்ச்சல் (பெண்கள்)**

எஸ். கலைவாணி (வவுனியா), சி. பவித்திரா (யாழ்ப்பாணம்), எஸ்.விதுசிகா (வவுனியா)-

**குழுநிலைப் போட்டி முடிவுகள்**

*துடுப்பாட்டம்* (பெண்கள்) - வவுனியா அணி, (ஆண்கள்) - மன்னார் அணி

*கரப்பந்து* - ஆண்கள் - யாழ்ப்பாணம் பெண்கள் - யாழ்ப்பாணம்


*கபடி* - பெண்கள் - வவுனியா

*வலைப்பந்தாட்டம்*- பெண்கள் - யாழ்ப்பாணம், ஆண்கள் - யாழ்ப்பாணம்.(6- 86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டை டெங்கு தாக்கும் அபாயம் பலமடங்கு அதிகரித்து வருகிறது.......!

டெங்கு இன்று இலங்கை முழுவதும் ஆட்டிப்படைக்கும் ஒரு தேசிய பிரச்சினை. 4 அல்லது 6 நாள்கள் நீடிக்கும் கடுமையான காய்ச்சல் சிலவேளைகளில் 3 அல்லது 4 நாள்




இலங்கையில் அறிவிக்கப்பட்ட டெங்குக் காய்ச்சல் / டெங்குக் குருதிப்பெருக்குக் காய்ச்சலின் (DHF) பரம்பல் கிழமைதோறும் - 2004 - 2009 (up to 18.09.2009)

களில் குறையும். சாதாரண காய்ச்சல் மற்றும் கடுமையான உளைவு அல்லது உடம்புநோ குறிப்பாக மூட்டுக்களில் (எலும்பை முறிக் கும் காய்ச்சல்) மயக்கம் அல்லது தலைச்சுற்று, கண்களிலிருந்து கண்ணீர் வடிதல், சிவந்த கண்கள், தலையிடி, வயிற்றுப்பிரட்டு அல் லது வாந்தி அத்துடன் குறிப்பிடத்தக்களவு பசியின்மை இவையெல்லாம் டெங்கின் அறி குறிகள்.

A-9 பாதையின் திறப்பு மற்றும் பருவ மழை, யாழ்.மக்கள் எதிர்பார்த்த, எதிர்பார்க்கும் முக்கிய நிகழ்வுகள். எல்லோரும் மகிழும் இந் நிகழ்வுகள் சுகாதாரத்துறையினருக்கும் மகிழ்ச் சியான நிகழ்வுகளே. ஆனால் மிகப்பெரிய பல சவால்களை பொதுமருத்துவத் துறையினருக்கு

கப்பட்டு வருகிறது. குறிப்பாக மழை காலங் களின் பின்பு ஏற்படுகின்றது.

இவ்வாண்டு ஏற்பட்ட பாரிய டெங்குத் தாக்கத்தின் (epidemic) மூலம் 18.09.2009 வரை 26147 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்க ளில் 253 பேர் மரணித்துள்ளனர். (படம்:1)

டெங்கு நோயானது 4 வகையான ஒன்று டன் ஒன்று தொடர்புபட்ட வைரசினால் உரு வாக்கப்படுகின்றது. ஒருவகையான வைர சினால் ஒருமுறை நோய் உருவானால் பின் தொடரும் நோய்த்தாக்கம் மற்றைய வகையான வைரசினால் அநேகமாக இருக்குமாதலால் நோய் வராமல் தடுக்கும் எதிர்ப்பு சக்தி (நிர்ப் பீடனம்) நோய்த்தாக்கத்திற்குட்பட்டவர்க ளில் ஏற்படமாட்டாது. மேலும் 2ஆவது அல் லது 3ஆவது வைரசினால் உருவாகும் நோய்த் தாக்கத்தினால் நோயாளி மிக அதிகமான சிக்கல் களை எதிர்நோக்குவார். (Complications Eg: DHF (Dengue Haemorrhagic Fever & Dengue Shock Syndrome)

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| தை | 00 |
| மாசி | 01 |
| பங்குனி | 02 |
| சித்திரை | 00 |
| வைகாசி | 00 |
| ஆனி | 00 |
| ஆடி | 01 |
| ஆவணி | 01 |
| புரட்டாதி | 04 |
| (18ஆம் திகதி வரை) | |
| மொத்தம்* | 09 |

யாழ்.மாவட்டத்தில் 2009 இல் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை

**டெங்கு நோயை உருவாக்கும் நுளம்பு:**

டெங்கு வைரசானது மனிதனில் இருந்து மனிதனுக்கு நுளம்புக் கடியினால் கடத்தப்படுகிறது. இந்நுளம்பானது அநேக

இரப்பை, குடல், மூக்கு, கண் மற்றம் முரசில் மெலிதான குருதிப்பெருக்கு (Bleeding) காணப்படும்.

பின்பு கறுப்புநிற வாந்தி "Coffee ground vomiting" தார் போன்ற மலம் வெளியேறல். (dark tarry Stools) ஏற்படலாம். சில நோயா ளிகளில் மிக நுண்ணிய குருதிப்பெருக்கு தோலில் ஏற்படுவதால் தோல் இளஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிறமாகக் காணப்படும். ஈரல் பெருத்துக் காணப்படும். இந்நிலையில் குரு திச் சிறுகுழாய்களிலிருந்து குருதித்திரவம் வெளியேறுவதால் நுரையீரல் சுற்றயல் குழி யிலும் வயிற்றுக்குழியிலும் திரவம் சேர்ந்து காணப்படும். (Asuities & Pleural Effusion)

**டெங்கு அதிர்ச்சி நிலைமை (Dengue shock syndrome)**

இந்நிலை நோயாளர்களில் மிகவும் பார தூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்நிலை டெங்கு குருதிப்பெருக்கு (DHF)நிலையைத் தொடர்ந்து அல்லது நேரடியாக ஏற்படலாம். இந்நிலையில் மூளை, சிறுநீரகம் , இதயம் மற் றும் குருதிச்சுற்றோட்டம் போன்றவை பாதிக் கப்படலாம். காய்ச்சல் குறைந்து காணப்படும். ஆனால் நோயாளி மிகவும் இயலாதவராக இருப் பார். கை, கால் குளிர்ந்து வெளிறிக் காணப்ப டும். குருதியமுக்கம் (Blood Presure) குறை யும், நாடித்துடிப்பின் அளவு (Volume) குறைந்து காணப்படும். இதனால் 24- 48 மணித்தியாலங்களில் இறப்பு ஏற்படலாம்.

**டெங்கு நோய்க்கான ஆய்வு கூட பரிசோதனைகள்**

1) குருதிச் சிறுதட்டு எண்ணிக்கை (Platelet count) எண்ணிக்கை 100,000 இலும் குறைந்து காணப்படலாம். 50 000 இற்கு குறைந் தால் உடனடியாகச் சிகிச்சை வழங்காவிட்டால் மிகவும் அபாயகரமான நிலைக்கு நோயாளி

அறியப்படாமல் இருப்பதனால் வருமுன் பாதுகாப்பதே ஒரே வழி. தடுப்பு முறைகளை இரு வகைப்படுத்தலாம்.


1) தனி நபர் பாதுகாப்பு Personal prevention)

வீடுகளுக்கு பூச்சி மருந்துகள் தெளித் தல் (Spraying) ,mosquito nets - நுளம்பு வலை (குறிப்பாக மருந்து தோய்க்கப்பட்ட Impregnated), நுளம்புத்திரி, மற்றும் மின்சார mats, உள்ளூர் மூலிகைகளின் புகை போன்றவை டெங்கு நுளம்புகளுக்கு எதிராகப் பாவிக்கப் பட்டாலும் முழுப்பாதுகாப்பை இவை தருவ தில்லை.

மேலும் பூச்சிமருந்து தெளித்தல் (Insect icde Sprays), நுளம்புத் திரி போன்றவை Pyre thrum எனும் பூச்சிகளுக்கு நஞ்சான பதார்த் தத்தை கொண்டுள்ளன. இவை மனிதனுக்கு மிகக்குறைந்தளவே நஞ்சானவை. ஆனால் இவை ஒவ்வாமைத் தாக்கங்களையும், தோல் தடித்தல் (rash) அல்லது Wheazing (தொய்வு) போன்றவற்றை சிலபேரில் ஏற்படுத்தும்.

ஆனால் பாதுகாப்பானதும், வினைத்திற னா னதுமான் நுளம்பு எண்ணெய் (Citranella oil) சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் உட் பட எல்லோரும் பயன்படுத்தலாம். இவை தவிர Cream களும் தற்போது உண்டு. இவற்றை வெளித்தெரியும் உட்பாகங்களுக்கு பூசலாம். (External Parts of Body). சில்வகை நுளம்பை ஈர்க்கும் இரவுவிளக்குகளும் பயன்படுத்தப் படுகின்றன.

திறந்த பாத்திரங்கள், மற்றும் வடிகால்




யாழ்.மாவட்டத்தில் அறிவிக்கப்பட்ட டெங்கு (DHF) / டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சலின் (DHF) பரம்பல் மாதம்தோறும் (2007-2009)

## இன்று தொடக்கம் ஒரு கிழமை தடுப்பு வாரம்

இந்நிகழ்வுகள் உருவாக்கியுள்ளன. அவற்றில் ஒன்றுதான் எதிர்காலங்களில் டெங்குநோய் யாழ்.குடாநாட்டில் பரவும் அபாயம். தெற்கிலி ருந்து அதிக மக்களின் வருகை மற்றும் பருவ மழை என்பவை டெங்கு தாக்கும் அபாயத் தைப் பல மடங்கு அதிகரித்துள்ளது. அத்துடன் யாழ்.மாவட்டத்தின் நுளம்புக் குடம்பிகளின் ஆய்வறிக்கை டெங்கை ஏற்படுத்தும் aedes இனத்தின் குடம்பிகள் பரவிக்கிடப்பதை உறு திப்படுத்துகின்றது. எனவே டெங்கு வராமல் தடுப்பதற்கு அதனைப் பற்றிய விழிப்புணர்வு எம்மிடையே ஏற்படுவது காலத்தின் கட்டா யமாகும்.

மேலும் எதிர்வரும் வாரத்தினை (செப்ரெம் பர் 21-27 வரை) சுகாதார அமைச்சு இரண் டாவது தேசிய டெங்கு தடுப்பு வாரமாக அறி வித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இக்கட்டுரை பிரசுரமாவது சாலச்சிறந்தது என நினைக்கி றேன்.

டெங்குக் காய்ச்ச்ல் முதன்முதலில் ஆபி ரிக்க நாடுகளிலிருந்து அறிவிக்கப்பட்டது. டெங்கு எனும் சொல்லானது சுவாகில் சொல் லான "டிங்கு" (dingo) (கடுமையான உளைவு அல்லது நோவினால் நடையில் ஏற்படும்

| மாதம் (month) | பாதிக்கப்பட்டோர் (cases) | மரணம் (Deaths) |
|---|---|---|
| தை (January) | 1279 | 14 |
| மாசி (February) | 948 | 11 |
| பங்குனி (March) | 869 | 10 |
| சித்திரை (April) | 1058 | 31 |
| வைகாசி (May) | 4182 | 64 |
| ஆனி (June) | 7048 | 52 |
| ஆடி (July) | 6872 | 54 |
| ஆவணி (August) | 3026 | 17 |
| புரட்டாதி (Septemper) | 865 | - |
| (2ஆவது கிழமை வரை) | 26147 | 253 |

இலங்கையில் 2009ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட டெங்கு நோயாளர் விவரம்.

மாற்றம்) என்பதைக் குறித்து நிற்கின்றது. இலங்கையில் பாரிய நோய்த்தாக்கம் (epidemic) 1967ஆம் ஆண்டிலிருந்து அறிவிக்

மாக சிறிய பாத்திரங்களில் ஏற்படும் நீர்த் தேக்கத்தில் (சிரட்டை, கோப்பை, ரயர், சிறிய பாத்திரங்கள், ரின்கள், சிறிய பூச்சாடிகள், அடைக்கப்பட்ட வாய்க்கால்கள், பீலிகள்...) பெருகுகின்றன. இதனால் இந்நுளம்புகள் "பாத்திரநுளம்புகள்" (Container mosquitoes) என அழைக்கப்படுகின்றன.

டெங்கு நுளம்புகளில் பெண் நுளம்புகள் மட்டுமே மனிதனைக் கடித்து நோயைப் பரப் புகின்றது. ஆண் நுளம்புகள் காதுகளில் ரீங்கா ரமிடுவதன் மூலம் தொந்தரவு செய்கின்றன. ஆனால் நோயைப் பரப்புவதில்லை. மற்றும் பெண்நுளம்புகள் பகல் வேளைகளில் குறிப் பாகக் காலை நேரங்களில் அல்லது இருட்டுவ தற்கு 2-3 மணித்தியாலங்கள் முன்பதாகவே குத்துகின்றன. எனவேதான் படுக்கும்போது நுளம்புவலை பாவிப்பதன் மூலம் பூரண பாதுகாப்பைப் பெறமுடியாது. 140 வகையான

உள்ளாவார்.

2)Packed cell Volume (PCV) (குருதிக்க லங்களின் கனவளவு) 10- 20% வரை அதிக ரிக்கப்படலாம். இவை இரண்டும் டெங்கு நோயென சந்தேகிப்பதை மேலும் வலுப்பெறச் செய்கின்றன.

3)Antibody test (IgG & IgM)

டெங்கு வைரஸிற்கு எதிரான பிறபொரு ளெதிரிகளை குருதியில் இனங்காண்பதன் மூலம் நோயினை மேலும் உறுதி செய்து கொள்ளலாம்.

குறிப்பு: தோலில் ஏற்படும் சிவப்பு நிலை (rash) டெங்கு மட்டுமல்லாது வேறு பல வைரஸ் நோய்களிலும் (measles சின்னமுத்து) ஏற்படுகின்றது. மேலும் குருதிச்சிறுதட்டுக ளின் (Plateletscount) குறைந்த நிலை (200 000,150 000 இலும் குறைவு) வேறு பல வைரஸ் நோய்களிலும் ஏற்படுகின்றது. எனவே

கள் போன்றவற்றிற்கு (Motor car Gear oil) பயன்படுத்தலாம். 2002ம் ஆண்டு புளோ ரிடா பல்கலைக்கழகமானது வெற்றிகரமாக "Perfect Diet Pill" என்னும் ஒரு வகையான ஓமோன் தயாரிப்பை (Larvicide) நுளம்புக் குடம்பியை கொல்வதற்கு அறிமுகப்படுத் தியுள்ளது.

டெங்கு நோய்குட்பட்டவர்கள் நுளம்புவலை களைப் பாவிப்பதன் மூலம் (குறிப்பாக வைத்திய சாலைகளில்) மற்றவர்களுக்கு டெங்கு பரவுவதைத் தவிர்க்கமுடியும்.

குறிப்பு: மேலும் மரணத்திலிருந்து தப்பு வதற்கு குணங்குறிகள் கண்டவர்கள் உடன டியாக வைத்தியரை நாடுவது சாலச்சிறந்தது.

## கழப்பது பெண்களே! கவனம்!

நுளம்பு வகைகள் டெங்கை பரப்புவதாக அறி யப்பட்டாலும் இலங்கையில் 2 வகையான நுளம்புகளே டெங்கு நோயைப் பரப்புகின்றன. (Aedes Eqypti, Aedes Albopictus) இவை பொதுவாகப் பருமனில் சிறியவை. பொது வாகக் கடும் நிறமானவை (dark) அத்துடன் வெள்ளை நிறப்புள்ளிகள் மற்றும் கோடுகள் (Bands) உடல் பகுதிகளிலும் கால்களிலும் காணப்படும். இவை புலியின் தோற்றத்தை ஞாபகப்படுத்துவதால் "tiger mosquito" என்றும் அழைக்கப்படுகின்றன.

**சிறுவர்களில் ஏற்படும் டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சல் (Dengue Haemorrhagic fever)**

DHF பெரும்பாலும் சிறுவர்களில் ஏற்படு கின்றது. சிலவேளைகளில் வளர்ந்தவர்களி லும் ஏற்படுகின்றது. டெங்கு நோய்த்தாக்கம் ஏற்படும் 200 பேரில் ஒருவருக்கு இந்நிலை ஏற்படுகின்றது. இதன் ஆரம்பநிலைகளில்

மக்கள் இந்நிலையில் பீதியடையாமல் வைத் தியரின் தொடர் கண்காணிப்பில் இருப்பதனை உறுதி செய்ய வேண்டும.

**சிகிச்சை**

டெங்கு வைரசுக்கு எதிரான குறிப்பான மருந்துகள் எதுவும் இல்லை. Paracetamol (பனடோல்) காய்ச்சலை குறைப்பதற்கும், வலியை குறைப்பதற்கும் பாவிக்கப்படுகின் றது. Aspirin (அஸ்பிரின்) I Buprofen (புரூ பன்) கட்டாயமாக தவிர்க்கப்படவேண்டும்.

டெங்கு குருதிப்பெருக்கு, டெங்கு அதிர்ச் சிநிலை (DHF & DSS) நிலைகளில் Intravenous fluids (ஊசி மூலம் ஏத்தும்பாயம்) அல் லது குருதிநீர்த்திரவம் (Plasma, Platelets or Blood) தேவைப்படலாம். Traneximic acid மருந்து குருதிப்பெருக்கை குறைக்கப் பயன் படுத்தப்படுகின்றது.

**நோய் பரவாமல் தடுத்தல்**

டெங்கு நோய்க்குரிய மருந்துகள் ஏதும்

**சமுதாயத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு முறைகள் (Prevention at Community Level)**

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற் கான தடுப்புமுறைகள் ஒருவரின் வீட்டுடன் மட்டுப்படுத்தக்கூடிய காரியமல்ல. அல்லது பக்கத்து வீட்டுடன் நிற்கக்கூடியதுமல்ல.

வைத்திய கலாநிதி ந.ராஜேஷ்கண்ணன்
பிராந்திய தொற்றுநோய்த் தடுப்பு அதிகாரி, யாழ்ப்பாணம்.

டெங்கை ஏற்படுத்தும் நுளம்புகள் 1/2 மைல் தூரம் வரை பறக்கக் கூடியவை. இது ஒரு சமுதாயப் பிச்சினை. முழுச் சமுதாயமே ஒன்றி ணைந்து செயற்பட்டால் மட்டுமே டெங்கு நோயை முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். திட்டமற்ற நகரமயமாதல், உரிய கழிவகற்றல் முறைகள் இன்மை போன்றவை பல கோடிமக்களை டெங்கு நோய்த்தாக்குவ தற்கான அபாயத்தில் கொண்டு வந்து விட் டுள்ளது.

(தொடரும்)




விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் நிறுவுநர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாள் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் வாழ்வக மாணவர்களின் இசைக்கச்சேரி, நடனம் ஆகியவற்றை

(படங்கள்: சுன்னாகம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமாதான தினச் சிறப்புமலர்

## 21.09.2009

## நல்லிணக்கம் நோக்கி



போர் மேகங்கள் கலைந்துள்ளன, புறத்தில், யுத்த அதிர்வுகள் தொடர்கின்றன அகத்தில், எங்கும் எதிலும் எவரிலும் அங்கலாய்ப்புக்கள், நெருக்கீடுகள், மனதில் சுமை எண்ணத்தில் குழப்பம், எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை, நமது வாழ்வின் நிதர்சனங்கள்.

வீதியால் போகின்றவர்களும் வீட்டில் இருப்பவர்களும், அலுவலகப் பணியாளர்களும், கலந்துரையாடுவது அமைதி, நிம்மதி, சமாதானம் என்ற உயர்நிலைப் பண்பு களின் உடனடித் தேவை பற்றித்தான். எப்பொழுது நமக்கு இயல்பான, ஆரோக்கியமான வாழ்வு கிடைக்குமென்ற ஏக்கம் பற்றித்தான். எப்படியிருந்தோம், இப்படி ஆகிவிட்டதே என்ற சலிப்புணர்வு பற்றித்தான். இழந்தவர்கள், பிரிந்தவர்கள், தொலைந்தவைகள் பற்றிய மனச்சுமையோடு வாழ்வுப்பயணம் நகர்கின்றது.

இவற்றுக்கப்பால் சென்று சமகால நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்துச் சிந்திக்கின்றபோது, நம்மவர்க்கு உள்ளக மாற்றம் அவசியமாகின்றது. இந்த மாற்றத்துக்குத் தளமாக நாம் இறந்தகால அனுபவங்களிலிருந்து விடுபட்டு எதிர்காலம்முன் விரிந்துகிடக்கின்ற நமது பாரிய கடமைகள் நோக்கிப் புதுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இது ஒரு கூட்டு முயற்சியாக, சமூக ஈடுபாடாக, எல்லா நிலையினரையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். தெளிந்த சிந்தனை, ஒருங்கிசைந்த உறவு, பன்மையில் ஒருமை காணும் தேடல், காழ்ப்புணர்ச்சிகளற்ற கலந்துரையாடல், விட்டுக்கொடுத்து இசைந்து போகின்ற ஆளுமை, பொதுநன்மை தேடும் தியாகம் போன்ற வலுவூட்டும் சக்திகளால் நாம் நிரப்பப்பட வேண்டும்.

நல்லிணக்கம் என்பது மொழி, இனம், சமூகம், சமயம், அந்தஸ்து என்பவற்றுக்கப்பால் மனித இதயங்கள் சங்கமமாகின்ற உறவுநிலை. இத்தகைய உறவுநிலை பேணப்படும்போது சமாதானம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு, அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை போன்ற தெய்வீகப் பண்புகள் மனித வாழ்வை அலங்கரிக்கும். அமைதி தேடி எங்கெங்கோ அலையும் நாம் எதிலும் எவரிலும் அதைப்பெற முடியவில்லையே என்று யாவற்றையும் சலிப்பதை விடுத்து அவை எமக்குள்ளேதான் இருக்கின்றன என்பதை அறிவுத் தெளிவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். ''நான்'' தான் அமைதியை ஏற்படுத்தும் கருவியாக, நம்பிக்கையைக் கொடுக்கும் சக்தியாக, மனித மேம்பாட்டுக்காகத் தியாகப்பணி செய்பவனாக முதலில் மாற வேண் டும் - செயற்பட வேண்டும். தனிமனிதன் மாற்றம் காணும்போது அவனைச் சார்ந்தவர்களும் மாற்றம் பெறுகின்றார்கள். மாற்றம் காணும் தேடலில் பலவற்றை நாம் இழக்க நேரிடலாம் - விட்டுக்கொடுக்கலாம். இழப்பும் விட்டுக்கொடுத்தலும் நோவைக் கொண்டுவரும். ஆனால் அவை நம்மால் அனுபவிக்கப் படும் வரை மாற்றம் வரப்போவதில்லை.

நலிவடைந்து, பொலிவிழந்து, கைவிடப்பட்ட நிலையில் ஏதோ வாழ்கின்றோம் என்கின்ற நமது இன்றையநிலை மாறவேண்டும். சக வாழ்வும் சகோதரத்துவமும் மீண்டும் உயிர்பெற வேண்டும் மனித மனங்கள் மகிழ்வடைய வேண்டும். எங்கும் எதிலும் அமைதி நிலவவேண்டும். ஒன்றிணைந்து பயணிப்போம். நல்லிணக்கத்துக்காக உழைப்போம். புதுவாழ்வு நோக்கி முன்செல்வோம். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெறுவார்களாக.

ம.போல் நட்சத்திரம், அ ம தி.

## ஆசியுரை



உலக சமாதான தினமாகிய இன்றைய நன்நாளில் எல்லா இன, மத, மக்களும் மத, இன பேதங்களை கடந்து ஒற்றுமையாகவும், புரிந்துணர்வுடனும், செயலாற்றுவதன் மூலம் நல்லிணக்கத்தைப் பேணி இந்நாட்டில் மட்டுமல்லாது, உலக நல்லிணக் கத்தை ஏற்படுத்த ஒரு பாதையை அமைப்போமாக. அந்த வகையில் இவ்வாறான நிகழ்ச்சிகளை உருவாக்கும் ''சமாதானத்திற்கும் நல்இணக்கத்திற்குமான பணியகத் திற்கு எமது நல்லாசிகள் உரித்தாகுக.

சிவஸ்ரீ. ப. மனோகரக் குருக்கள்<br>
சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்,<br>
ஆனைப்பந்தி,<br>
யாழ்ப்பாணம்.

## எல்லா இன மக்களும் விரும்புவது மகிழ்வான வாழ்வு

பரந்து விரிந்து காணப்படும் இவ்வுலகில் வாழும் எல்லா இன, மத, மக்களும் விரும்புவது மகிழ்வான வாழ்வு. இவ்வாழ்வு ஏற்படுவதற்கு வாழும் சூழல், சமூகம் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும். இவ்அமைதி ஏற்படுவதற்கு ஒவ்வொரு மனிதனிடமும் அவனுள்ளே சமாதானம் இருக்க வேண்டும். அதை நினைவு கூரும் முகமாக சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் சர்வதேச சமாதான தினத்தினை (புரட்டாதி 21 இல்) அனைவரும் ''நல்லிணக்கத்தை நோக்கி.....'' கரம் கோர்த்து ஓர் இதயமாக அழைக்கின்றோம். இந்நாளை எம்மில் நாம் ஆரம்பிப்போம். நல்லிணக்கத்தை எமக்குள் விதைத்து நம்பிக்கை என்னும் நல்ல துளிர்களை மற்றவர்களுக்கு கொடுத்து ஏற்றுக்கொள்ளல் எனும் பச்சை இலைகளாக மாறுவோம். ஆறுதல் எனும் இனிமையான கனிகளை கொடுப்போம். நிம்மதி என்னும் நிழல் மரங்களாக வாழ்வோம். என்ற நம்பிக்கையுடன் சமாதான தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்<br>
இல.08, குருசோ வீதி,<br>
யாழ்ப்பாணம்.

# ராசி பலன்

21-09-2009 முதல்<br>
27.09-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்கும்.

### இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடு கள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்பபுகள் நிறை வேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.

### மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியத்தடை இருக்கம். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்கும். தெய்வீக நாட்டம் மேலோங் கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன் னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது.

### கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக் நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

### விருட்ஷிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்ககலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு காலதாமதாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு காலதாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மோலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இராது.

### கும்மம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

### மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்பாதிக்ககலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் விதாதா வள நிலையத்தை விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண திறந்து வைப்பதையும் நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் உரையாற்றுவதையும் விருந்தினர் மேடையில் அமர்ந்திருப் பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 11கிராம அலுவலர்களுக்கு வெற்றிடங்கள்

கோப்பாய், செப்.21

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளில் 20 கிராம அலுவலர்களே பணிபுரிந்து வருகின்றனர்.

11 கிராம அலுவலர்களுக்கு வெற்றிடம் நிலவி வருகிறது.

இதனால் தற்போது பணிபுரியும் 20 கிராம அலுவலர்களுமே ஏனைய வெற்றிடம் நிலவும் பிரிவுகளுக்கும் சுழற்சி முறையில் பதில் கடமை புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச செயலர் பிரிவின் 31 கிராம அலுவலர் பிரிவிலும் சுமார் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரம் பேர் வசித்து வருகின்றனர்.

இம்மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாகவும் பல்வேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வசித்து வருபவர்களும் ஆவர்.

இதனால் இவர்களுக்குக் கிராம அலுவலரின் தொடர்பு அடிக்கடி தேவைப்படுவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவர்களின் தேவையைக் கவனிப்பதில் பதில் கடமை புரியும் கிராம அலுவலர்களும் வேலைப்பளுவை சுமப்பதுடன் பதில் கடமைக்காகப் பிரிவுகளுக்குச் செல்வதால் அவர்களைத் தேடித் திரியும்நிலை ஏற் படுவதாகப் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (203-72)

## சுனாமியால் பெற்றோரை இழந்த பரு.பிரதேச சிறார்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப்.21

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில், சுனாமியால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்குத் தலா பத்தாயிரம்ரூபா பெறுமதியான சேமிப்புச் சான்றிதழ்கள் யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தால் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு இன்று காலை 9மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சேமிப்புச் சான்றிதழ்களைப் பெறும் சிறுவர்கள் பெற்றோருடன் அல்லது பாது காவலருடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சேமிப்புச் சான்றிதழ் பெறும் சிறுவர்களின் விவரம் வருமாறு:-

ஜே/405- அம்பிகாவதி கிருநாந், அம்பிகாவதி கலையரசி, அம்பிகாவதி கலையரசன்.

ஜே/406 - யோகேஸ்வரராசா நிர்மலன், யோகேஸ்வரராசா கிருசாந்தினி, யோகேஸ்வரராசா தர்சிகா, ஆறுமுகம் ரவிக்குமார்.

ஜே/ 394- ஜெனபிரட் அன்ரன் கிறிஸ்ரீபன், ஜெனிபிரட் அன்ரன் டினேஸ், ஜெனிபிரட் அன்ரன் மேரிசுலக்சனா, ஜெனிபிரட் அன்ரன் டனுசன், ஜெனிபிரட் அன்ரன் சுபேசினி.

ஜே/393- தங்கவடிவேலு நவலோஜினி, தங்கவடிவேலு லக்ஸ்மன், ஜெயக்குமார் ஜெனார்த்தனன், ஜெயக்குமார் ஜனனி, ஜெயக்குமார் ஜெசிந்தன், ஜெயக்குமார் ஜெனோ, ஜெயக்குமார் ஜெயலக்சன்.

ஜே/ 388 - இரத்தினசாமி சாந்தரூபன், இராசேந்திரம் ராதிகா, மகாலிங்கம் மயூரன்.

ஜே/ 401 - சதீஸ்குமார் மதுஜா, துரைராசா கிருஸ்ணநாயகி, துரைராசா துஸ்யந்தன், துரைராசா விஸ்வநாயகி, துரைராசா சஞ்சயன். (203- 201)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வண்ணார்பண்ணையில் சிரமதானம்



யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதரப் பகுதியின் வண்ணார்பண்ணைச் சுகாதாரப் பரிசோதகர் பு.ஆறுமுகராசா தலைமையில் ஆத்திசூடி வீதியில் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பகுதி கிராம அலுவலர் தி.ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் தொண்டர்கள் சிரமதானப்பணிகளை மேற்கொள்வதைக் காணலாம்.

நல்லூர், செப்.21

டெங்கு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகரசபைச் சுகாதாரப் பகுதியின் வண்ணார்பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் நேற்று முன்தினம் தொடக்கம் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமை வண்ணார்பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகராசா தலைமையில் ஆத்திசூடி வீதியில் ஆரம்பிக்கப்பட்ட சிரமதான வேலைகளில் கிராம அலுவலர் ரி. ஸ்ரீஸ்கந்தராசா, பகுதி குடும்பநல உத்தியோகத்தர் உ.தயாநிதி மற்றும் தொண்டர்கள், இந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

டெங்கு வாரத்தை யொட்டி இடம்பெறும் சிரமதானப்பணி ஆத்திசூடி வீதியில் இருந்து இராமநாதன் வீதி- அரசடி வீதி ஆகிய பகுதிகளில் வார இறுதிவரை தொடர்ந்து நீடைபெறவுள்ளது. இந்தப் பகுதி மக்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு முழு ஆதரவையும் வழங்கும் வகையில் சிரமதானப் பணிகளில் கலந்து கொள்ளுமாறும் பிரிவு பொதுசுகாதார பரிசோதகர் ஆறுமுகராசா கேட்டுள்ளார். (203- 111)

## சட்டவிரோதச் செயற்பாடு இடம்பெற்றால் பொலிஸில் உடனடியாக முறைப்பாடு செய்க

### ஊர்காவற்றுறைப் போலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,செப்.21

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் இடம் பெறும் சட்ட விரோதமான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வருதல் வேண்டும். இதன் மூலம் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி.

ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற 'சட்டம், ஒழுங்கு' தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுமதியின்றி மாடுகளை இறைச்சிக்கா வெட்டுதல், சட்ட விரோத மதுவிற்பனை, திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொது மக்கள் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்க முன்வரவேண்டும்.

நேரடியாகத் தகவல்களைத் தெரிவிக்க விரும்பாவிடில் அவற்றை எழுத்துமூலம் பொலிஸ் நிலையத்தில் உள்ள முறைப்பாட்டுப் பெட்டியிலிடலாம்.

அவை குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். எனவே ஆர்வமுள்ள தமிழ் இளைஞர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தினால் விநியோகிக்கப் படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம். இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை 28ஆம் திகதி நடைபெறும்- என்றார்.

ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜேம்ஸ் சிங்கராயர் உரையாற்றுகையில்:

நீண்டகாலம் சட்டம், ஒழுங்கு சீர்குலைந் திருந்தமையால் இன்றைய இளைஞர்களுக்குச் சட்டம், ஒழுங்கு தொடர்பாக எதுவித தகவலும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே அவர்களுக்குச் சட்டம், ஒழுங்கு தொடர்பாக விளக்கமளித்தல் அவசியமானதாகும். இது முறையாக அமுல்படுத்தப்படும் பட்சத்தில் விரைவில் எமது நாடு மகிழ்ச்சிகரமான சூழலை நோக்கிப் பயணிக்கக் கூடியதாக இருக்கும்- என்றார். (203-16)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### முற்றவெளிப் பகுதியில் வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், செப்.21

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் முற்றவெளியில் கே.கே.எஸ்.வீதி மற்றும் பிரதான வீதி போன்றவற்றுக்கு மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

வீதிகளில் உள்ள ஒவ்வொரு மின்கம்பங்களிலும் இவை பொருத்தப்பட்டு வருகின்றன. (203 - 204)

## தற்போது உருவாகி வரும் சுதந்திரமான நிலைமையை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்

### ஊர்காவற்றுறை நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப்.21

தற்போது எமது மக்களுக்கு படிப்படியாக அனைத்து வகையிலும் சுதந்திரமான நிலைமைகள் நெருங்கி வருவதால், அத்தகைய சூழ்நிலையை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் தம்பாட்டி 'கூட்டுறவுநகர்'கடையை கடந்த 16ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது வருமாறு:

இப்பகுதி மக்களின் [illegible] ஒழிக்கப்பட்டமைக்கும் நலன்களைக் கருத்திற்கொண்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. நாம் இணக்க அரசியலின் மூலம் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டு வருகிறோம். தற்போது யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்படவுள்ளது. அதற்கான நம்பிக்கை காணப்படுகிறது.

தற்போது எமது மக்களுக்குப் படிப்படியாக அனைத்து வகையிலும் சுதந்திரமான நிலைமைகள் நெருங்கி வருவதால் அத்தகைய சூழ்நிலையை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

படையினர் காரணமாக உள்ளதாக ஒரு பக்கம் கூறப்பட்டாலும்,தமிழ்பேசும் மக்கள் இடப்பெயர்வுகள் மற்றும் உயிர்த் தியாகங்களைச் செய்து இன்று இவ்வாறானதோர் அமைதிச் சூழ்நிலை திரும்புவதற்கு எமது மக்களும் பாரிய தியாகங்களைச் செய்துள்ளனர்.

கடந்த கால யுத்தம் எமது மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்றார் அமைச்சர்.

இக்கூட்டுறவு நகர் திறப்பு விழாவில் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை அபிவிருத்திச் சங்கம் முதியோர் விவரம் கோருகிறது

நல்லூர், செப்.21

அரியாலை அபிவிருத்திச் சங்கம் தனது பகுதியில் உள்ள முதியவர்களைக் கௌரவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அரியாலையைத் தமது சொந்த வதிவிடமாகக் கொண்ட முதியவர்கள் தமது பெயர் விவரங்களை மேற்படி சங் கத்தில் நாளைவரை பதிவு செய்து கொள்ளமுடியும் எனவும் இடம் பெயர்ந்து வேறுபகுதிகளில் உள்ள அரியாலையைச் சேர்ந்தவர்களுக்கும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் சங்கத்தின் தலைவர் எஸ். ரீ. பத்மநாதன் தெரிவித்தார். (203-111)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1123 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 02 15 22 37

18-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 217,906 | 20/- | 4,358,120/- |
| 2 இலக்கங்கள் | 20,013 | 40/- | 800,520/- |
| 1 இல. + லக்கினம் | 19,881 | 60/- | 1,192,860/- |
| 2 இல. + லக்கினம் | 1,849 | 200/- | 369,800/- |
| 3 இலக்கங்கள் | 541 | 1000/- | 541,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200.000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,172,300/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 260,248 | | 8,672,300/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,973,750/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்கார வெற்றியாளர் : சமிந்த ருவன் இத்தமல்கொட றக்குவான

கைத்தொலைபேசி வெற்றியாளர்: ஆர்.பி.டபிள்யூ.ஜயசிறி புத்தளம்

2009 செப்டம்பர் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100.000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 500530615-5-37 |
| நுவரெலியா | 500520512-4-40 |
| திருகோணமலை | 500514234-7-30 |
| கொழும்பு | 500514475-8-07 |
| அனுராதபுரம் | 500527808-4-45 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை


## முதியோர் கௌரவிப்பு

நல்லூர், செப்.21

முதியோர் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வை. தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் பு. தஜிதாசும் கலந்து கொள்வர்.

முதியோர் கௌரவிப்பையொட்டி அரியாலையைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளதாகவும் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் மேற்படி போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (203-111)

## அனுமதியின்றி மரமேற்றிய சாரதிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 21

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மரங்கள் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மரங்களையும் பறிமுதல் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கம் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மரங்களைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (203-207)

## கூ.சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 21

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் சங்கங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசத் தலைவர் எஸ்.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (203-224)


இன்று முதல்.....

சந்தை விலையில்.....

the SUNDAY TIMES ரூ.50/=

Vijey விஜய் ரூ.15/=

எமது விற்பனை முகவர்கள்....

யாழ்ப்பாணம், பேருந்து நிலையம் - பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம், சிவன் கோவிலடி - உமா ஸ்ரோஸ்
யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெரு - R.இராமச்சந்திரன் நியூஸ் ஏஜென்ட்
நல்லூர், பருத்தித்துறை வீதி - சிவானந்த கபே
திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி - சிவன் ஸ்ரோஸ்
திருநெல்வேலி, அம்மன் வீதி - சுஜன் குறூப்
கொக்குவில், காங்கேசன்துறை வீதி - பாக்கியா ஸ்ரோஸ்
இணுவில், காங்கேசன்துறை வீதி - தனபாலசிங்கம் நியூஸ் ஏஜென்ட்
சுன்னாகம், மத்திய பேருந்து நிலையம் - துர்க்கா ஸ்ரேசனர்ஸ்
பண்டத்தரிப்பு, கீரிமலை வீதி - சிறி முருகன் புத்தகசாலை
சண்டிலிப்பாய், சீரணி சந்தி - R.S. Communications
மானிப்பாய், ஆலடிச் சந்தி - மெடிலாண்ட்
கோப்பாய், இருபாலை சந்தி - Lycky Fancy House
ஆவரங்கால், புத்தூர் - கிருஸ்ணா மல்டி சொப்
நெல்லியடி, கரவெட்டி - மொடர்ன்ஸ் ஸ்ரோஸ்
பருத்தித்துறை, பிரதான வீதி - கவிதா ஸ்ரோஸ்
சாவகச்சேரி, கண்டி வீதி - மணியம் ஸ்ரோஸ்
மீசாலை, புத்தூர் சந்தி, கண்டி வீதி - கஜமுகன் ஸ்ரோஸ்
கொடிகாமம், பேருந்து நிலையம் - நியூ அருள்நாயகி புத்தகசாலை

மேலதிக விபரங்களுக்கு 0714 943 854



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ ... 
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்- காவலாளி
## (குறியீட்டு இலக்கம் 315/17)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள காவலாளி (315/17) பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை சங்கக் காரியாலயத்தில் 20/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **பொதுமுகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி** என்னும் முகவரிக்கு 05.10.2009ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**பதவி:** காவலாளர் குறியீட்டு இலக்கம் 315/17

**சம்பளத் திட்டம்:** (66/2006 இன்படி)
8950-10300
65x10-70x10

**கல்வித்தகைமை:** 5ஆம் வகுப்புச் சித்தியுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**வயது:** 18-45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**
1. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
3. மேற்படி பதவிக்குச் சங்கத்தால் கோரப்படும் பிணைப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

(சீ/56090)

பொது முகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 04.06.1928 உதிர்வு 22.08.2009

அமரர்
### சரவணமுத்து சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற கணக்காளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி)

அன்பின் வடிவாய்
அறிவின் சுடராய்
தயாள குண உருவாய்
தரணி போற்ற வாழ்வு கண்டு
எங்களையும் நல் வாழ்வு காண வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இறை நிழலில் இன்ப முத்தி நிலைபெற்று
அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.09.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம் பெறும். இவற்றில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வளை, சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

(89049)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்சியம் மாத்திரை தினம் எடுக்கலாமா?

கேள்வி : பெண். வயது 26. எனக்கு சூலகத்தில் கட்டிகள் (Polycystic Ovary Disease) இருப்பதாகக் கண்டறியப்பட்டு - இதன் காரணமாக அடிவயிற்றில் வலி ஏற்பட்டதால் கடந்த இரண்டு வருடங்களாக மருந்துகள் எடுத்து வருகிறேன். உபயோகிக்கும் மருந்து Metformin மாத்திரைகள். இவை நீரிழிவுக்குரிய மாத்திரைகள் என அறிந்தேன். எனக்கு நீரிழிவு நோய் எதுவும் இல்லை. ஆனால் இந்த மாத்திரைகளை உபயோகித்த பின்னர் - பலவீனம், கலைவலி. அடர்த்தியான உரோம வளர்ச்சி, முகப்பரு, எடை அதிகரிப்பு என்று பல நோய்க்குணங்கள் ஏற்பட்டுள்ளன. இதுபற்றி எமது மருத்துவரிடம் விசாரித்த போது - மாத்திரைகளைத் தொடர்ந்து எடுக்க அறிவுறுத்தியுள்ளார். எமக்குத் தெரிந்த ஹோமியோபதி மருத்துவர் ஒருவரிடம் காட்டியபோது இந்தக் குணங்குறிகள் நீரிழிவு மாத்திரையால் ஏற்பட்டதென்றும், அதை நிறுத்த ஹோமியோபதி வைத்தியத்தைப் பின்பற்றும்படியும் அறிவுறுத்தியுள்ளார். இப்பொழுது என்ன செய்வதென்று புரியாத குழப்ப நிலையில் உள்ளேன். உங்கள் ஆலோசனை தேவை!

பதில் : நான் மேற்கத்திய மருத்துவத் துறையைச் சார்ந்தவனாக இருப்பதாலும், ஆயுள்வேத, சித்த வைத்தியர்கள் நிறைய உள்ள வைத்திய பரம்பரையில் வந்தவன் என்பதாலும், யூனானி, ஹோமியோபதி, அக்யூபங்சர் வைத்தியத் துறைகளில் உள்ள அனுபவத்தாலும், அவற்றில் பரிச்சயம் உள்ளவன். எனவே, நான் உங்கள் கேள்விக்கு எதுவித பக்கச்சார்பும் இல்லாமல் பதிலளிக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மருத்துவத்துறையும் ஒன்றுக்கொன்று எதிலும் இளைத்தவை அல்ல. ஆனால், ஒவ்வொன்றினதும் தத்துவம், கோட்பாடு, சிகிச்சைமுறை, நிதானிப்பு (Diagnosis) என்பவை அடிப்படையில் வேறுபட்டவை. எனவே, அவை ஒவ்வொன்றும் நோய் நிதானம், சிசிக்சைமுறை, உணவு விதிகள் என்பவற்றில் வித்தியாசப்படுகின்றன. உதாரணமாக, நாடிபார்ப்பது ஆங்கில, ஆயுள்வேத, சித்த, சீன வைத்தியமுறைகளில் பொதுவாக இருந்தாலும், எப்படிப் பார்ப்பது, எதனை எதிர்பார்ப்பது என்பதெல்லாம் வித்தியாசமானவை. நோய்க்கு காரணங்கள் கூட ஆங்கிலத்தில் நோய்க்கிருமிகள், நோய் எதிர்ப்புச் சக்தி (Immuno Response) என்பவற்றின் அடிப்படையிலும், ஆயுள்வேதத்தில் வாத பித்த கபம் என்ற காரணங்களின் அடிப்படையிலும், சீன வைத்தியத்தில் Yin. Yang, ஐம்பூதங்கள் என்பவற்றின் அடிப்படையிலும், ஹோமியோபதியின் அடிப்படையிலும், இனம் காட்டப்படுகின்றன.

ஆனால், இத்துறைகளில் உள்ள வைத்தியர்கள் தங்களது துறைதான் சிறந்தது என்று வரிந்து கட்டிக்கொண்டு வாதம் புரிகின்றார்கள். எப்படி குருடர்கள் பார்த்த யானை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருந்ததோ - அது போலவே தமது துறைதான் சிறந்தது என்று பிடிவாதம் பிடிக்கின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் - சரியானபடி நோய் நிதானிக்கப்பட்டால் - எந்தத் துறை வைத்தியரும் தனது துறையில் அந்த நோய்க்கு நிச்சயம் சிகிச்சையளித்து வெற்றி பெறலாம். நோய் சரியானபடி நிதானிக்கப்படாவிடில் எந்த வைத்தியரும் சிறந்த வைத்தியராக இருப்பினும் நோயைக் குணமாக்க முடியாது. இந்த அடிப் படையில் உங்கள் ஹோமியோபதி மருத்துவர் உங்கள் நோயை அவரது மருத்துவ அடிப்படை யில் சிகிச்சை அளித்து குணமாக்க முடியும்.

ஆனால், உங்கள் நோய்க்கு ஆங்கில மருத்துவர் தந்த சிகிச்சை முறை முழுக்க முழுக்க பொருத்தமானதே. இதற்கு நீரிழிவுக்கு உபயோகிக்கும் மாத்திரையான Metformin தான் தரப்படும். உங்களுக்கு ஏற்பட்டுள்ள குணங்கள் குறிகள் மாத்திரையால் ஏற்பட்டவை அல்ல என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். உங்களுக்கு ஏற்பட்டுள்ள சூலகக் கட்டி நோயின் நிமித்தமாகவே இவை ஏற்பட்டுள்ளன. உடலின் ஹோர்மோன்களின் பிரச்சினையால்தான் இந்த நோய் ஏற்பட்டுள்ளது. நீரிழிவு மாத்திரை தவிர, மாதவிலக்கு ஒழுங்காக வர சிகிச்சையும் தேவை. மேலும் உங்கள் கோளாறுக்கு சரியான மருத்துவம் செய்யப்படாவிடின் - பிற்காலத்தில் Infertility என்கின்ற



மலட்டுத் தன்மை ஏற்பட வாய்ப்பு உண்டு.

***

கேள்வி : ஆண். வயது 57. இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். உயரம் 5' 8". நிறை 76 கி. கிராம். எனக்கு எதுவித நோயும் தற்போது இல்லை. நான் சைவ உணவு மட்டும்தான் உண்கின்றேன். தினமும் உணவில் தயிர் சேர்த்துக்கொள்கின்றேன். தினமும் பழங்கள், பால் உபயோகிப்பேன். சமீபத்தில் ஒரு மருத்துவ சஞ்சிகையில் - எனது வயதினர் - தினமும் கல்சியம் சத்து மாத்திரைகள் கண்டிப்பாக உபயோகிக்கவேண்டும் என்று மருத்துவர் ஒருவர் கூறியிருந்தார். அதன்படி -நான் கல்சியம் 500 மி. கிராம் - தொடர்ந்து உபயோகித்து வருகின்றேன். தொடர்ந்து கல்சியம் உபயோகித்தால் சிறுநீரகக் கற்கள் உருவாகும் என எனது நண்பர்கள் கூறுகிறார்கள். எனது மனைவியும் - தற்போது மாதவிலக்கு என்றபடியால் கல்சியம் உபயோகிப்பது நல்லதா? விளக்கம் தருக.

பதில் : உங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் கல்சியம் சத்துள்ள பால், தயிர் என்பவற்றை உணவில் சேர்ப்பதால் - மேலதிக கல்சியம் சத்து - கல்சியம் மாத்திரைகள் ரூபத்தில் தேவையில்லை என்பது எனது அபிப்பிராயம். மேலதிகமாக கல்சியம் சத்து உடலில் சேர்ந்தால் - அதுவும் - தக்காளி, பசளி என்பவற்றோடு இணையும்போது - சிறுநீரகக் கற்கள் உருவாகுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. மேற்கூறிய உணவு வகைகளில் உள்ள Oxalic அமிலத் தன்மை கல்சியம் ஒக்சலேட் (Calcium Oxalate) கனிப் பொருளை உருவாக்கி சிறுநீரகக் கற்களுக்கு வழி வகுக்கும். இதேபோன்ற நிலைமையில்தான் உங்கள் மனைவிக்கும் கற்கள் எற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. மாதவிலக்கு நின்றுவிட்ட காலப்பகுதியில் - பெண் ஹோர்மோன்கள் சுரப்பும் குறைவுபடுவதால் - எலும்புகளில் கல்சியம் கரைவதற்கு சந்தர்ப்பம் இருந்தாலும் - உணவில் மாத்திரை வடிவில் உடலுள் சேரும் கல்சியம் - எலும்பில் படிவதற்கு ஹோர்மோன்களின் தொழிலும் அவசியம். எனவே இந்த ஹோர்மோன்களைப் பெறும் வழியை பெண் நோயியல் நிபுணர்களின் ஆலோசனையுடன் கேட்டறிவது சாலச்சிறந்தது.

***

கேள்வி : பெண். வயது 29. அடிக்கடி ஒழுங்கில்லாத மாதவிலக்கு சொட்டுச் சொட்டாக ஏற்படுகிறது (Spotting). எனது பெண் நோயியல் நிபுணர் - இதற்கு கருவானது குழாயில் தங்கியிருப்பது (Ectopic Pregnancy) தான் காரணம் என்கின்றார். எனக்கும் சில வேளைகளில் வலதுபக்க - அடிவயிற்றில் - லேசான வலியும் ஏற்படுகிறது. இது குழாயில் தங்கிய கர்ப்பமாக இருக்குமா? சந்தேகத்தைத் தீர்க்கவும்!

பதில் : உங்களுக்கு Ultra Sound Scan பரிசோதனை ஒன்று செய்யப்படவேண்டும். அதில் - கருப்பை வெற்றிடமாக இருந்தால் - வயிற்றறையில் - கட்டியோ, அல்லது நீர் கோர்த்தோ (Free Fluid) இருக்கின்றதா என்பது அறியப்படவேண்டும். அப்படி ஏதாவது குறி காணப்பட்டால் நிச்சயம் அது குழாயில் தங்கிய கர்ப்பமாக கணிக்கப்படும். இந்தவகை கர்ப்பத்துக்கு - அவசர - அவசியமான சத்திரசிகிச்சை தேவைப்படும். இதேவேளை வயிற்றைக் கீறித் திறந்தோ அல்லது நவீன Laproscopic என்கின்ற வயிற்றில் துவாரம் போட்டு உபகரணங்களை செலுத்தியோ செய்யலாம். இந்த சத்திரசிகிச்சையின் போது கர்ப்பம் தங்கியிருக்கும் குழாய்ப் பகுதி - கர்ப்பத்தோடு முற்றாக அகற்றப்படும்.

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் மருத்துவ எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


ஸ்கேன் பரிசோதனையில் எதுவித கோளாறும் கண்டறியப்படாவிடின் SERUM BETA HCG என்கின்ற இரத்த கர்ப்பப் பரிசோதனையோ, அல்லது சிறுநீர்க் கர்ப்பப் பரிசோதனையோ செய்யப்படவேண்டும். இந்தப் பரிசோதனையில் கர்ப்பம் இல்லை என்று கண்டறியப்பட்டால் நிச்சயம் நீங்கள் சந்தேகித்த 'குழாய் கர்ப்ப'மாக இது இருக்கமாட்டாது. எனினும் சொட்டுச் சொட்டாக கிரமமில்லாத மாதவிலக்கு ஏற்படக் காரணம் கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவேண்டும். அநேகமாக இப்படியான கோளாறு - கருத்தடை மாத்திரைகளை உபயோகிப்பவர்களுக்கு, அல்லது ஹோர்மோன் பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடியது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

***

# மனித சுவாசத்தின் முக்கியத்துவம்


"தூங்கையிலே வாங்குகிற மூச்சு; அது சுழிமாறிப்போனாலும் போச்சு" என்று சுவாசத்தின் பெருமையைக் கூறுவார்கள். உணவும் தண்ணீரும் இல்லாமல் நாட்கணக்கில் இருக்கலாம். ஆனால் சுவாசம் இல்லாமல் சில நிமிடங்களுக்கு மேல் இருக்கமுடியாது.

ஒரு நிமிடத்திற்கு 16 அல்லது 18 முறை கள் நாம் சுவாசிக்கிறோம். ஒரு முறை சுவாசிப்பதற்குள் நம்முடைய இதயம் நான்குமுறை துடிக்கிறது. சுவாசிக்கும் செயல் நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை. சுவாசமும், இதயத்துடிப்பும் அனிச்சை செயல்கள் எனப்படும். மூச்சின் இயக்கமும், இதயத்துடிப்பும் ஓர் உயிரில் முதன்முதலாக எவ்வாறு ஆரம்பித்தன என்பது புரியாத புதிர். சுவாசிப்பதில் உள்ள ஒழுங்கையும், இதயத்தின் இயக்கத்தோடு அதற்குள்ள இசைவையும் ஆராயப்புகுந்தால் மனித மனம் தெளிவடையும்.



காற்றை உள்ளே இழுக்கும்போது நுரையீரல்கள் நன்றாக விரிவடைய வேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்து அல்லது நிமிர்ந்து நின்று சுவாசிப்பதால் உடலுக்குத் தேவையான ஒக்சிஜன் முழுஅளவில் நுரையீரலுக்குள் செல்லும். சுவாசத்தில் ஒக்சிஜனின் அளவு குறைந்தால் நீர்க்கோவை, காசநோய் போன்ற வியாதிகள் உடலைத்தாக்கும்.

நுரையீரலுக்குள் செல்லும் ஒக்சிஜன் இரத்த ஓட்டத்தில் கலந்துவிடுகிறது. இரத்தத்தில் உள்ள காபனீரொக்சைட் நுரையீரல் வழியாக வெளித்தள்ளப்படுகிறது. இந்த காபனீரொக்சைட் வாசனை அற்றது. ஆனால் மனிதர்கள் வெளிவிடும் மூச்சுக்காற்றில் பெரும் பாலும் ஒரு கெட்ட வாசனை இருக்கும். இதற்குக் காரணம், மனித உடலில் உள்ள அசுத்தம், சிதைந்த பற்கள், நோயுற்ற தொண்டைச் சதைகள் மற்றும் நோயுற்ற காற்றறைகள்



ஆகியவை.

புகையிலைப் புகை மூச்சு உறுப்புகளைப் பாதிக்கிறது. நுரையீரலின் உள் உறையைக் கெடுக்கிறது. மது அருந்தியவுடன் சிறிது நேரத்துக்கெல்லாம் மூச்சுக்காற்றில் மதுவின் வாடை அடிக்கும். இரத்தத்தோடு கலந்த மது நுரையீரல்களுக்கு வந்ததும் நுரையீரல் மதுவில் இருக்கும் நஞ்சை வேகமாக அப்புறப்படுத்தும் முயற்சிதான் அந்த கெட்ட வாடை.

சுவாசத்தை நாம் சுவாசிப்போம். சுவாசம் எம்மை சுவாசிக்க நாம் வழிசெய்து கொடுப்போம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய், கல்வளை பாரதி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழா அண்மையில் ச.ச.நிலைய முன்றிலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், யாழ்.மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா, சண்டிலிப்பாய் மத்தி கிராம உத்தியோகத்தர் பு.நிருபன், வலிகாமம் ப.தெ.வ.அபிவிருத்தி கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரன், வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ம.ஜெகூ, மானிப்பாய் ப.தெ.வ.அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம் ஆகியோருக்கு மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும்-

உயர்தரப் பரீட்சையில் அதிவிசேட சித்திகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிபெற்ற சண்டிலிப்பாய் இந்துவின் மாணவர்களான தே.சுதர்சன், சி.சரூபன் ஆகியோருக்கு யாழ்.மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம். *(படங்கள்: இரா.சுதா)*

# நகரின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் நடவடிக்கைகளில் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதே நோக்கம்

## திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உரை



நல்லூர், செப். 21

நகரின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றவும் அதனை அழகுபடுத்தக் கூடியதுமான நடவடிக்கைகளில் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதே எமது நோக்கம். யாழ்.மாநகர முதல்வராகப் பதவியேற்கவுள்ள திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இவ்வாறு தெரிவித்தார்.

மாநகராட்சி மன்றத்தின் கீழ் உள்ள சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

30 வருட அழிவில் இருந்து நகரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

நடந்தவற்றை மறந்து விடுவோம். இப்பொழுது நமது தேவையானதெல்லாம் கல்வி, சுகாதாரம், விளை யாட்டுக்களுடன் ஏனைய அத்தியாவசிய தேவைக ளிலும் முன்னேற்றமும் அபிவிருத்தியும் காண வேண்டியதே.

இனமத, கட்சி பேதங்களை விடுத்து அவற்றை விலக்கிவிட்டு எமது நகரத்தை வளப்படுத்த ஒன்றிணைந்து பணியாற்றுவதே.

சனசமூக நிலையங்கள் தமது பகுதிகளின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளவேண்டிய திட்டங்களை எமக்குத் தந்தால் அவைகள் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார்.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ உரையாற்றும்போது கூறியதாவது:

மக்கள் பிரதிநிதிகளினூடாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் நீண்டகாலமாக இங்கு மறக்கப்பட்டு விட்டன.

ஊராட்சி மன்றங்கள் மக்களுடன் மிகவும் நெருக்கமான பிணைப்பைக் கொண்டவை.

எனவே உங்களைச் சந்திப்பதன் மூலம் உங்கள் பகுதியின் குறைபாடுகளை அவர்கள் நேரடியாகத் தெரிந்துகொண்டு பிரச்சினைகளை அறிந்து எதிர்காலத்தில் அவற்றை நிறைவு செய்யமுடியும்.

அதன் ஆரம்பந்தான் இன்றைய சந்திப்பு. எமது செயற்பாடுகள் அனைத்தும் உங்களுடன் சம்பந்தப்பட்டவை.

அந்தவகையில் எமது வளங்களைத் தேடுவதற்கும் அதற்காக முன்னெடுக்க வேண்டியவை குறித்து உங்கள் கருத்துக்களை முன்வைத்தால் அந்த இலக்கை அடையக்கூடியதாக இருக்கும் - என்றார்.

இந் நிகழ்வின் போது யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுக்கக் கூடியதாக மீண்டும் சனசமூக நிலையங்களின் சமாசத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாநகர சபை முதல்வரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே செயற்பட்டு வந்த யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நாட்டுச் சூழல்களைத் தொடர்ந்து செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் தமது தேவைகள் , குறைபாடுகள் குறித்து அடுத்து வரும் விவரங்களைத் தருமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோககேஸ்வரி பற்குணராஜா சனசமூக நிலையப்பிரதி நிதிகளிடம் இக்கலந்துரையாடலின் போது கேட்டுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (203-111)

### எரிபொருள் நிரப்பியபோது தீப்பற்றிய மோட்டார்சைக்கிள்

யாழ். நகரில் எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்தது.

மோட்டார் சைக்கிள் இயங்கிய நிலையின் நின்ற சமயம் பெற்றோல் நிரப்பிய வேளை தீப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தீயணைப்புக் கருவி மூலம் தீயை அணைத்ததாகக் கூறப்பட்டது. (203-224)


## மக்கள் பணி தொடர எம் வாழ்த்துக்கள்



கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலை மேற்கொள்ள வழிசமைத்த மாண்பு மிகு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

கே.என். டக்ளஸ்தேவானந்தா

அவர்களின் வழிகாட்டலில் மக்கள் பணியாற்றி வரும் நெடுந்தீவு மண்ணின் மைந்தனும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட மக்கள் தொடர்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமாகிய

திரு. சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்)



அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவியேற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். அமைச்சர் அவர்களின் வழிகாட்டலில் கடற்றொழிலாளர் மக்களுக்கு பணிகள் பல செய்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பருத்தித்துறை. (89053)

## மானிப்பாயில் இயங்கும் உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள்கள் தேவை

1. விற்பனைப் பிரதிநிதி (SALE REP)
   க.பொ.த. உயர்தரம் ஆங்கில அறிவு
2. விற்பனையாளர்கள் (Salesman)
3. சாரதி (வாகன ஓட்டுநர்)
   (வயது எல்லை 30-50 உட்பட்டவர்கள்)
   நற்சான்றிதழ்களுடன் வரவும்.
4. கணனி அறிவுள்ள பெண்பிள்ளைகள்:
   (மானிப்பாயை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

உங்கள் சுயவிவரக்கோவையுடன் 25.09.2009 அன்று காலை 10-2 மணிவரை *ஐங்கரன் மோட்டோர்ஸ் மானிப்பாய்* என்னும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

உரிமையாளர்.

(89052)

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சுந்தரம் யோகானந்தா
திதி: திருதியை
21.09.2009

மலர்வு: 20.10.1954
உதிர்வு: 30.09.2000

ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் இனிய நினைவுகள்
துர்க்கை திருநாளாம் இந்நாளில்
துயருடனே வாழ்ந்து கொண்டு உங்கள்
ஆத்ம சாந்திக்கு இறைவனை வணங்குகின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

மனைவி,
பிள்ளைகள்.

(89054)

## பாலன் மில்

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு, சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் ஆயிரம் கிலோவரை இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

நாடவேண்டிய ஒரே இடம்:

பாலன் மில்,
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.

(89036)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
கந்தசாமி பாலசௌந்தரி
திதி: திருதியை (21.09.2009)

மலர்வு: 22.03.1938
உதிர்வு: 16.10.2004

அம்மா அம்மா எங்கள் தெய்வமே
அன்போடு அரவணைத்த அம்மாவே
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
ஆறுதல் கூற யாருமில்லை
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுடன் வாடுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால்வாடும்
மகன், மருமகள், பேரன்.

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு.

(89...9)

## விற்பனைக்கு

கட்டடம் கட்டுவதற்குரிய தரமான நாலு இஞ்சி (4'') கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் தூண்கள் விற்பனைக் குண்டு.
தொடர்பு : 0263268222/ 0774163146

## சிங்களம்

தனியார் கல்வி நிலையங்களுக்கு வந்து சிங்களம் கற்பிக்கப்படும். விரும்பிய கல்வி நிலையங்கள் தொடர்பு கொள்ளலாம்.

V.S. [illegible],
பத்திரவத்தை,
இளவாலை,
T.P.: 021 3211801

(89049)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 25 . 10 . 1929
விண்ணில் 25 . 09 . 2006

புங்குடுதீவு - 3
அமரர் கனகரெத்தினம் கனகம்மா
திதி:21.09.2009

எங்களுக்கு நிழல் கொடுத்த எம் அம்மாக்குஞ்சு
நாம் அழுத கண்ணீர் காயமுன்னே
மூன்றாண்டுகள் ஓடியதே
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

'கனகம்மா அகம்'
ராசபாதை,
கல்வியங்காடு.

தகவல்: பிள்ளைகள்
தேவிகருணானந்த சிவம்,
ரேவதி ராஜன், ரதி ஈசன்,
செல்வரெத்தினம் சுபராகினி,
மற்றும் பேரப்பிள்ளைகள்.

(சி 560943)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவுக்கு அம்புலன்ஸ் படகு வழங்கிய வைபவத்தையொட்டி அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் நயினாதீவு வைத்திய அதிகாரி எஸ்.சண்முகரத்தினம், பிரதேசசபை உப அலுவலக பொறுப்பாளர் ந.மோகனரூபன், சர்வதேச மருத்துவக் குழுவின் வடக்குத் திட்ட முகாமையாளர் எஸ்.நோமிநாதன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள். நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

## உள்ளக இடம்பெயர்ந்தோர் ஐ.நா.அதிகாரி கேய்லின் நாளை கொழும்புக்கு விஜயம் மேற்கொள்கிறார்

நியுயோர்க், செப். 21

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் மனித உரிமைகள் மற்றும் உள்ளக இடம்பெயர்ந்தவர்களுக்கான பிரதிநிதி வோல்டர் கெய்லின் நாளை 22 ஆம் திகதி கொழும்பு வருகிறார்.

ஜெனிவாவில் கடந்தவாரம் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் தொடர்ச்சியாகவே கொழும்புக்கு விஜயம் செய்யவிருப்பதாக கெய்லின் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்வதுடன் உயர்மட்ட அதிகாரிகளுடனும் அவர் பேச்சு வார்த்தை நடத்துவார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷவுடன் கெய்லின் விசேடமாகப் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (1)

### உயர்தரக் கணித, விஞ்ஞான மாணவருக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 21

தேசிய கல்வி நிறுவகம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து மாகாணக் கல்வித் திணைக்களம் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வினை நடத்தவுள்ளது.

இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும், பௌதிகவியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வு அதே திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. (203-38)

### யாழ். மாவட்ட அபி.கூ. சங்கத்துக்கு புதிய தலைவர் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக சமாதான நீதிவான் ஆறுமுகம் செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

மேற்படி சங்கத்தின் இயக்குனர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் செல்லத்துரையை உடனடியாகத் தமது பதவியைப் பொறுப்பேற்று பணியாற்றுமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கேட்டுள்ளார். (201- 224)

### மனிக் முகாம் பகுதியில் தேடுதல்

கொழும்பு, செப் 21

வவுனியா மனிக் முகாமில் உள்ள மக்களுக்கு விற்பனை செய்யவென வெற்றிலை மற்றும் புகையிலையை எடுத்து வந்த ஆட்டோவில் இருந்து ரி 56 துவக்குக்கு உரிய இரண்டு ரவைகளும் இரண்டு பற்றறிகளும் மீட்கப்பட்டுள்ளன என ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து மனிக் முகாம் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது. (1)

### விபத்துக்களில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 21

வாகன விபத்துக்களில் சிக்கி 4 வயது சிறுமி, குடும்பப்பெண் உட்பட மூவர் வெவ்வேறு சம்பவங்களில் காயமடைந்தனர்.

கல்வயல், கச்சாய் ஆகிய பகுதிகளில் இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் சைக்கிள் மோதியதில் வீழ்ந்த குடும்பப் பெண்ணுக்கு கை முறிந்தது. கல்வயல் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த வீ.சிவதர்சினி (வயது 34) என்பவரும் மழைபெய்து நனைந்திருந்த ஒழுங்கையில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கிவீசப்பட்டு கல்வயலைச் சேர்ந்த கா. வேதநாயகம் (வயது 57) என்பவரும் காயமடைந்தனர்.

கச்சாய் பகுதியில் வீதியில் சென்ற மாட்டுடன் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு எல்.சசீபா (வயது 4) என்ற சிறுமியும் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (203-207)

## சம்பூரில் நிலக்கரி மின்சார உலை
## இலங்கை-இந்தியாவுக்கிடையில் விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

கொழும்பு, செப். 21

திருகோணமலை சம்பூரில் 1000 மெகாவற் மின்சக்தி உற்பத்தி செய்யக்கூடிய நிலக்கரி மின்சார உலை ஒன்றை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று மிக விரைவில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கையெழுத்திடப்படவிருக்கின்றது.

மின்சாரம் மற்றும் சக்தி துறைகளுக்கான அமைச்சு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நிலக்கரியினால் உற்பத்தி செய்யப்படவிருக்கும் இந்த மின்சாரத்துக்கான உலை இருநாடுகளுக்குமிடையிலான ஒரு கூட்டுத் திட்டமாகும். நாட்டிலேயே இது மிகப்பெரிய நிலக்கரி மின்சார உலையாகவிருக்கும். 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இவ்வுலை ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றும் இருநாடுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட விருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டத்தின் முதல் கட்டம் 2012 ஆம் ஆண்டளவில் முற்றுப்பெறும் என்றும், இதன் ஆரம்ப திட்ட வரைவு முடிவுற்றுள்ளதாகவும் நவம்பரில் நிலக்கரி உலை வேலைகள் ஆரம்பமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நிலக்கரி உலையின் கட்டுமானப் பணிகள் இந்தியாவின் தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் என்றும் திட்டத்தின் பொறியியல் பணிகளை இலங்கை மின்சாரசபை கவனிக்கும் என்றும் தெரியவருகின்றது. (ப)

## மருத்துவ உள்ளகப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களில் 17 பேருக்கு யாழ். பிராந்திய பணிமனையின் கீழ் நியமனம்

### மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.21

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் தமது மருத்துவ உள்ளகப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 17 வைத்திய அதிகாரிகள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதன் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்காக மத்திய சுகாதார மற்றும் போஷணை அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் இவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வை. தினேஸ்காந் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து கோப்பாய் பிரிவு வைத்தியசாலை, எஸ். பிரசன்னா- யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஜே.ஆர். யூட்றோகி பாஸ்கரன் - நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை, திருமதி எஸ்.என் விதான கமகே- எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலை, செல்வி.எஸ். சங்கீதா, ஆ.வை.புத்தளம் ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பருத்தித்துறைக்கும், இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

ஆர்.எம். ரங்கல மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்கும் டி.சிவலிங்கராஜா- திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் டி.பி.பி.டிஎஸ். விக்கிரமநாயக்கா மொனறாகல பொது வைத்தியசாலையில் இருந்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.எம்.பி செனவிரத்ன திருகோணமலை பொது வைத்தியசாலையில் இருந்து ஊர்காவற்றுறை பிரிவு வைத்தியசாலைக்கும் பி.என்.எம்.ஏ. பெர்னான்டோ திருகோணமலை பொது வைத்தியசாலையில் இருந்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் டி.ஏ.கமகே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து சங்கானை பிரிவு வைத்தியசாலைக்கும் ஏ.எம் ஹனூன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் க. கிருபா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து வல்வெட்டித்துறை பிரிவு வைத்தியசாலைக்கும். எஸ்.ஜ. மார்குக் திருகோணமலை பொது வைத்தியசாலையிலிருந்து காரைநகர் பிரிவு வைத்தியசாலைக்கும். பி.ரெஜன்ஸ் வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து நயினாதீவு பிரிவு வைத்தியசாலைக்கும் ஓ.வி.பனப்பிற்றியா வவுனியா பிரிவு வைத்தியசாலையில் இருந்து நெடுந்தீவு பிரிவு வைத்தியசாலைக்கும், டபிள்யு.டி. கே. விஜேசிங்கா மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மத்திய சுகாதார அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் எவரும் யாழ்ப்பாணத்தில் தமது கடமைகளை இதுவரை பொறுப்பேற்கவில்லை என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203-300)

## ஊர்காவற்றுறை, கரம்பொன் பிரதேசத்தின் தேவைகள்; அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப்.21

ஊர்காவற்றுறைக்கு விஜயம் மேற்கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கரம்பொன், ஊர்காவற்றுறை பிரதேச மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தார்.

அந்தப்பிரதேச மக்களின் குறைபாடுகள் தேவைகள் ஆகியன தொடர்பாகக் கேட்டறிந்த அமைச்சர் விரைவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதாக உறுதியளித்தார்.

அதேவேளை-

மேலைக்கரம் பொன் பாத்திபுலம் முருகமூர்த்தி ஆலய மகா கும்பாபிஷேகத்தின் மூன்றாம் நாள் நிகழ்விலும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார். (1- 201)



அமைச்சர் ஆலயத்துக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# BIT Bachelor of Information Technology
## - University of Colombo -

BIT வெளிவாரிப் பட்டப்படிப்பு தொடர்ந்தும் இலங்கையில் மிகவும் மதிக்கப்படுகின்ற IT Degree ஆக விளங்குகிறது. இது 6 Semester களை உள்ளடக்கிய 3 வருட கற்கைநெறியாகும்.

இது மிகவும் சிக்கனமானதும் இலகுவான கட்டண முறைமையைக் கொண்டதுமாகும்.

BIT பட்டதாரி ஒருவரின் ஆரம்ப சம்பளம் Rs.40,000 - Rs.45,000.

Total Course Fee : Rs. 150,000/=
3 + 24 installment களில் கட்டணங்களை செலுத்தலாம்.

10% Discount for full Payment,
20% Discount for Technical College Students.(first 30students)
50% Discount for current University Students.(first 30students)
Group Registrations special offer (minimum 10 students)

**யார் விண்ணப்பிக்கலாம் ?**

* A/L Bio / Maths / Commerce / Arts முடித்தவர்கள்.
* 2009 August இல் A/L செய்தவர்கள் Pending Results உடன் விண்ணப்பிக்கலாம்.

IDM ஊடாக University registration களுக்கான இறுதி திகதி 22nd September 2009.

Weekday & Weekend Batches Commencing,on 1st week of October 2009

NOW Introducing FIT in Jaffna....

A/L சித்தி இல்லாமல் BIT Degree செய்திட Colombo University யின் FIT Programme வழிவகுக்கின்றது.
Duration : 5 Months
Course Fee : Rs. 20,000/= (Only for first 15 Students)

# BCS Professional Examinations-UK

BCS Professional Qualification ஆனது ஒரு UK Honours Degree க்கு சமனான பட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இது UK யின் Software Engineering ற்கான ஒரேயொரு Charted Engineering Body யான BCS ஆல் வழங்கப்படுகின்றது. Masters Degree செய்ய விரும்பும் மாணவர்களுக்கு BCS Path ஆனது ஒரு அதி விரைவான மார்க்கமாகும்.

Course Duration 1 1/2 years [2 Sittings per year].
Total Course Fee : Rs. 90,000/= [Payable in installments].
Examination Fee [UK] : approx. Rs. 120,000/= .

BCS முடித்தவர்கள் இலங்கையில் Moratuwa பல்கலைக்கழகத்திலும் UK யில் 50ற்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களிலும் Masters Degree யை தொடரலாம்.

**யார் விண்ணப்பிக்கலாம் ?**

தகவல் தொழில்நுட்பத்தில் உயர் அங்கீகாரம் ஒன்றை பெற விரும்பும் - ஆங்கிலம்(சாதாரண) அறிவுடைய எவரும் விண்ணப்பிக்கலாம்.

### Your Course Plan

Certificate Level Exam Sitting - April 2010
Diploma Level Exam Sitting - October 2010
PGD Level Exam Sitting - April 2011

Weekday & Weekend Batches Commencing,on 1st week of October 2009

மேலதிக விபரங்களுக்கு : 0772365461
0772365460 OR
Meet Mr. Ragukumar
@

IDM
Nation's ICT Academy
Affiliated University College



No 216, Navalar Road, Jaffna


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட மாகாண விளையாட்டு விழாவின் பதிவுகள் சில...



விருந்தினர்கள் அழைத்துவரப்படும் காட்சி

இராமநாதன் கல்லூரியின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்பு

அஞ்சலோட்டத்தில் முன்னிலைபெற்ற யாழ்.வீரன்

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களின் உடற்பயிற்சி சாகசம்

கோலூன்றிப் பாய்தலில் ஒரு காட்சி

கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரையாற்றுகிறார்

யாழ்.அரச அதிபர் உரையாற்றுகிறார்

ஆளுநர் சந்திரசிறி உரையாற்றுகிறார்

பிரதம விருந்தினர் அமைச்சர் டக்ளஸ் உரையாற்றுகிறார்

முதலிடம்பெற்று கேடயம் பெறும் யாழ்.மாவட்டம்

முதலிடம்பெற்ற யாழ்.மாவட்ட அணியினர்

தட்டெறியும் வீரர்

மூன்றாம் இடம்பெற்று கேடயம் பெறும் மன்னார் மாவட்டம்

இரண்டாம் இடம்பெற்று கேடயம் பெறும் வவுனியா மாவட்டம்

இரண்டாம் இடம்பெற்ற வவுனியா மாவட்ட அணியினர்

மூன்றாம் இடம்பெற்ற மன்னார் மாவட்ட அணியினர்

தொகுப்பு
அதிரன், நேசன்
தமிழ்அரசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட விலைக்கழிவு — Mega Offer

3 வருட உத்தரவாதம்!

உலகமே கணனி மயம்!
இன்றே நீங்களும் இணையுங்கள்!

விற்பனைக்குப் பிந்திய தரமான சேவைகள்!

உங்களின் தேவைகளுக்கான எங்களின் சேவைகள்

| Mega-1 | Mega-2 | Mega-3 | Mega-4 | Mega-5 |
|---|---|---|---|---|
| 1.8 Dual core Celeron | 2.5 Dual core | 2.6 Dual core | 2.6 Dual core | 2.93 Core 2Duo |
| Foxconn G31 | Foxconn G31 | Foxconn G31 | Asus M/B | Intel G31 M/B |
| 320GB HDD | 320GB HDD | 320GB HDD | 500GB HDD | 500GB HDD |
| 1 GB DDR II Memory | 1 GB DDR II Memory | 1 GB DDR II Memory | 2 GB DDR II Memory | 2 GB DDR II Memory |
| DVD Writer | DVD Writer | DVD Writer | DVD Writer | DVD Writer |
| ATX Casing | ATX Casing | ATX Casing | ATX Casing | ATX Casing |
| 15."6" LCD Monitor | 15."6" LCD Monitor | 15."6" LCD Monitor | 19" LCD Monitor | 19" LCD Monitor |
| Keyboard Ps/2 | Keyboard Ps/2 | Keyboard Ps/2 | Keyboard Ps/2 | Keyboard Ps/2 |
| Mouse Ps/2 | Mouse Ps/2 | Mouse Ps/2 | Mouse Ps/2 | Mouse Ps/2 |
| 39000/= | 41750/= | 42650/= | 52000/= | 60200/= |

கணனி வாங்கும் ஒவ்வொரு மாணவருக்கும் யாழ்நகரில் பிரபல கணனி நிறுவனமான **DMI** கணனி நிறுவனத்தில் கணனிப் பாடநெறிக்கு 25% கட்டணக்கழிவு

→ எங்களின் நோக்கம் நீங்களும் ஒரு கணனி வல்லுனராக வரவேண்டுமென்பதே! → கணனி பிரச்சனைகளுக்கான உடனடித் தீர்வுகள்

உங்களது சகல விதமான கணனித் தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள

| | | |
|---|---|---|
| DCP UPS | 8GB Flash Kingston | Creative Woofer 5.1 |
| LQ 300+II Epson | 2GB Transcend | Spectra Woofer 5.1 |
| Epson Ribbion | Card Reader | Electric Blower |
| Epson Inject Printer | Bluetooth | A4tech Web Camera |
| Hp Toners No.1 | Laptop USB Speaker | PCI Modem |
| Hp Inject Printer | Microlab Woofer 2.1 | Combo TV Box |
| Hp Toners No.1 | Creative Woofer 2.1 | PCI TV Capture Card |

**PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD**

305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101

521/1 Navalar Road, Jaffna. Tel :- 021 222 9644

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகேந்திரன்



யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகேந்திரன் (Rtd. Asst. Director of Planning, Nuwaraliya) நேற்று (20.09.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் மாணிக்கவாசகர் (London), ஸ்ரீபன் செல்வராசா (Canada), சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அம்பிகை (London), இந்திராதேவி (Canada) ஆகியோரின் மைத்துனரும் கோகுலன், வேணி, சாரா, சீத்தா, சுரேக்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.09.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/2, சுவாமியார் வீதி,*
கொழும்புத்துறை.

தகவல்:
க.சாரதாதேவி (சகோதரி)

(89057)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 07 ★ 12 ★ 1949



மறைவு 12 ★ 10 ★ 1999

### திருமதி பீதாம்பரம் சாந்தநாயகி

திதி: திருதியை (21.09.2009)

அன்னையே!
ஆண்டுகள் பத்தென்ன
ஆயிரம் ஆனாலும்
ஆறாது எம் துயரம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
சாந்தசோலை,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

* புறோயிலர் குஞ்சுகள் * பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. மொத்த வியாபாரிகளு  கு விசேட கழிவு உண்டு.

தொடர்பு: அபிசா ரேடர்ஸ்,
K.K.S றோட், யாழ்ப்பாணம்.
[மிட்டாசுக் கடைச் சந்தி, முஸ்லிம் ஹோட்டல் அருகில்]
தொ.பே.:0772487500, 021 7210816

## தவறிவிட்டது

தெல்லிப்பழையைச் சேர்ந்த துரைராசா ரவிராஜன் என்பவரது கடவுச் சீட்டு (Pass port), தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம், ஒரு தொகை சவூதி றியால் பணம் என்பன அடங்கிய பை(Bag) தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில்(10.09.2009) அன்று தவறிவிட்டது.தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 0778694516 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.21

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (9)

## கல்விக் கண்காட்சி

யாழ்.பிறவுண் வீதி எவர்சைன் கல்வி நிலைய ஏற்பாட்டில் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

நிறுவன இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் [illegible] வில் மகப்பேற்று நிபு[illegible] கலந்து கொள்வார். (1)

## வேலை ஆள்கள் தேவை

அலுமினியம் பொருத்துதல் மற்றும் கண்ணாடி வெட்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

நியூ அசோகா அலுமினியம் பிற்றிங் சென்ரர்.
63, K.K.S. வீதி, சுன்னாகம். 021 2240331, 0773609034

## பெயர் மாற்றம்

தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம், J/112 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் தேவதாஸ் என்பவரின் மகனாகிய ***ரெறன்ஸ் சேவியர் ஜீவானந்தம்*** ஆகிய நான் 21.09.2009 இல் இருந்து எனது பெயரினை ஜீவானந்தன் என மாற்றி உள்ளதுடன் இனிவரும் காலங்களில் எனது ஆவணங்கள் அனைத்திலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் எனத் தெரியப்படுத்துகிறேன்.

(89043) T.Geevanantan.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி பவளராணி தனபாலச்சந்திரன்

மலர்வு: 14★08★1949

உதிர்வு: 23★08★2009

எங்கள் குடும்ப விருட்சத்தைப் போற்றி வளர்த்து ஒளிவிளக்காய் திகழ்ந்து அன்போடும் பண்போடும் பெருமையுடனும் பேணிக் காத்து எம்மை நல்வழி நடத்தி இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தெய்வத்தின் அழியா நினைவுகளுடன்...

அன்னாரின் இறுதி நிகழ்வுகளின்போது நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (21.09.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

26A, அன்ன சத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
பொ.தனபாலச்சந்திரன் (சோதி).

(89059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 'இசுறு' திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்கள். விருந்தினர்கள் சிறுமிகளின் அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதையும். 'இசுறு' திட்ட முகாமையாளர் எஸ்.எல்.எம்.டி.பியசேன மங்கள விளக்கு ஏற்றுவதையும், இசுறு வேலைத்திட்ட செயலாளர் அநுர திஸநாயக்க கல்லூரி அதிபர் ஆறு திருமுருகனால் ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதையும், விருந்தினர்கள் கல்லூரி முன்பாக கட்டடம் அமையும் இடத்தைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (செய்தி 3 ஆம் பக்கத்தில்) படங்கள்:நேசன்

# மறவன்புலவு, தனங்கிளப்பு விவசாயிகளுக்கு இன்று விதை நெல் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.21

ம்றவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களில் நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கும் நிகழ்வு இன்று காலை 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள மூட்டு ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் நடைபெற உள்ளது.

கைவிடப்பட்ட நெற்காணிகளில் செய்கை மேற்கொள்ளவிருக்கும் விவசாயிகளுக்குவழங்க தெற்கில் இருந்து விவசாயத்திணைக்களத்தால் எடுத்து வரப்பட்டுள்ள விதை நெல்லே விநிே யாகிக்கப்பட இருக்கிறது.

மறவன்புலவு, தனங்கிளப்பு கமக்கார அமைப்புகளிடம் நெற்செய்கையை மேற்கொள்வதற்கான பதிவுகளை மேற்கொண்டு, அவர்களது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காணி உரிமையாளர்கள் மற்றும் சட்டரீதியான குத்தகை ஆவணங்களைக் கொண்டிருக்கும் விவசாயிகள் ஆகியோர் விதை நெல் பெற்றுக்கொள்வதற்காக அழைக்கப்படுகின்றார்கள் என பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

அத்துடன் செய்கை மேற்கொள்ளும் காணியின் விஸ்தீரணத்திற்கு ஏற்ப விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளதால் வெற்றுச் சாக்கு ஒன்றையும் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (1)

# வலி.கிழக்கில் 'நிஷாவால்' அழிந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க 56 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கோப்பாய்.செப்.21

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 'நிஷா' புயல் மழையினால் அழிவுற்ற கால்நடை (ஆடு, மாடு, கோழி) வளர்ப்போருக்கு இழப்பீடு வழங்கவென 5.68 மில்லியன் (56 லட்சத்து எண்பதினாயிரம்) ரூபா ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இழப்பீடு வழங்குவற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுவதாகவும் விரைவில் இழப்பீட்டுத்தொகை வழங்கப்படுமென வும் தெரிவிக்கப்படுகிறது. 'நிஷாப்' புயலின் மூர்க்கத்தால் நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், கோப்பாய் பிரதேசங்களில் பெருமளவு பட்டிமாடுகள் உட்பட பல்லாயிரக்கணக்கான கோழிகள், 700 ற்கும் மேற்பட்ட ஆடுகள் அழிந்தன என மதிப் பிடப்பட்டிருந்தது. புயல் இடம்பெற்று ஒரு வருடமாகின்ற போதிலும் இப்போதா வது இழப்பீடு கிடைக்க இருப்பதனால் இது வரை பண்ணை வளர்ப்பை நிதியின்மையால் ஆரம்பிக்காமல் இருப்பவர்கள் மீளத்தொடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக பண்ணை வளர்ப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (1-72)

# சங்கானையில் குளத்தில் தவறிவீழ்ந்த வயோதிபர் சடலமாக மீட்பு

சங்கானை, செப்.21

சங்கானை மண்டிகைக் குளத்துக்குள் நேற்றுமாலை 5 மணியளவில் தவறி வீழ்ந்த வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கீரிமலையில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை தேவாலய வீதியில் வசித்து வந்த முத்துக்கிருஷ்ணன் துரைசிங்கம் (வயது 62) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். குளத்துக்கு அருகில் உள்ள பாதையால் சென்ற இவர் தவறி குளத்தில் வீழ்ந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்திய பின்னர் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பியுள்ளனர். (1-29-93-112)

## வலி.கிழக்கில் நாளை விவசாய உதவி வழங்கும் நிகழ்வு

கோப்பாய்.செப்.21

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 'கமநெகும' கிராமத்தின் பிரிவுகளுக்குட்பட்ட பயனாளிகளுக்கு நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பிரதேச செயலகத்தில் வைத்து விதைநெல் மற்றும் விவசாய உபகரணங் கள், உள்ளீடுகள் வழங்கும் திட்ட நிகழ்வு [illegible]ம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதேச செயலர் உபகரணங்களை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைப்பார். (1-72)

## மானிப்பாயில் சிசு மீட்பு இளம்பெண்ணுக்கு விளக்கமறியல்

சண்டிலிப்பாய், செப்.21

மானிப்பாய்ப் பகுதியில் பற்றைக்குள் இருந்து மீட்கப்பட்ட சிசு தொடர்பாக விசாரணையில் ஈடுபட்டுள்ள மானிப்பாய் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இளம்பெண் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். மல்லாகம் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் மானிப்பாய் பகுதியில் உள்ள பற்றைக்குள் சிசு ஒன்று இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திர ஜெயவீர தலைமையில் சம்பவ இடத்துக்கு விரைந்துசென்ற பொலிஸார் பற்றைக்குள் உயிருடன்இருந்தசிசுவை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். சிசுவிற்கு சிகிச்சையளித்த வைத்திய அதிகாரிகள் சிசு இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் இளம் பெண் ஒருவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிவான் இவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (1-115)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு சீருடைத் துணிகள்

யாழ்ப்பாணம், செப் 21

தென்மராட்சிப் பிரதேச இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலைய மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினரால் விநியோகிக்கப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை இவை வழங்கப்பட்டுள்ளன. (203-207)



வவுனியா அகதி முகாமிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்ட 5 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் முகாமிலிருந்து வெளியேறிச் செல்கின்றபோது......

# நாட்டின் சமாதான முன்னேற்றங்களில் முஸ்லிம்களின் பங்களிப்பு அளப்பரியது

## நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

இலங்கையின் சமாதான முன்னேற்றங்களில் முஸ்லிம்களின் பங்களிப்பு அளப்பரியதாகும் என்று தமது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஜனாதிபதியின் நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சிங்களவர்கள், தமிழர்கள், பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்த நாட்டைத் தாய் நாடாகக் கொண்டிருக்கும் ஏனைய எல்லா சமூகத்தவர்களுடனும் இலங்கையில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்கள் நட்புறவுடன் வாழ்ந்து வந்துள்ளதோடு, நாட்டின் முன் னேற்றத்துக்கும் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

கடந்த வருட ஈதுல் பித்ர் கொண்டாட்டத்தின் போது நாம் கிழக்கு மாகாணத்தையும் அங்கு வாழும் பெருந்தொகையான முஸ்லிம் சமூகத்தையும் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவித்திருந்தோம். இன்று முழு நாடுமே பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதோடு, வடமாகாணத்தில் தங்களது சொந்த இருப்பிடங்களை விட்டும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் தங்களது சொந்த இடங்களுக்கு மீளச்சென்று சுதந்திரமாகத் தமது சமய பாரம்பரியங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்விசேட சந்தர்ப்பத்தில் ஐக்கியம், சமாதானம், சகிப்புத்தன்மை, நட்புறவு என்பவற்றுடன் கூடிய ஒரு புதியதோர் இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவ தற்காக தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் நாட்டின் சமாதான முன்னேற்றங்களுக்கான பங்களிப்பையும் நாம் இலங்கை முஸ்லிம்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். (அ-சி)

# மஹிந்தவுக்கு எதிரான கூட்டணி; அடுத்த மாதம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படவிருக்கும் எதிர்க்கட்சிகளின் உத்தேசக் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு அடுத்த மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

இந்த உத்தேச கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வை இம்மாதம் 27 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 18 ஆம் திகதி சந்தித்துப் பேசிய, எதிர்க்கட்சிகளின் உத்தேசகூட்டணியில் அங்கம் வகிக்கவுள்ள கட்சிகளின் தலைவர்கள் அங்குரார்ப்பண நிகழ்வைப் பிற்போடத் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

எதிர்க்கட்சிகளின் உத்தேச கூட்டணியில் அங்கம் வகிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடிப்படையில் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆயினும் இக்கூட்டமைப்பில் இணைவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது தேசிய சம்மேளனத்தின் அனுமதியை உத்தியோக பூர்வமாக இனிமேல்தான் பெற வேண்டியுள்ளது. அத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தவிர்க்கமுடியாத காரணத்தால் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்காரணங்களாலேயே எதிர்க்கட்சிகளின் உத்தேச கூட்டணியின் அங்குரார்ப்பண வைபவத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்துவதில்லையென எதிர்க்கட்சிகளின் உத்தேச கூட்டணியில் அங்கம் வகிக்கவுள்ள கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெற இருந்த இந்த அங்குரார்ப்பண நிகழ்வு அடுத்த [illegible] நடைபெறும் என்று ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (அ-சி)

# "டெங்கு" மேலும் பல இடங்களுக்குப் பரவும் சாத்தியம்; மீண்டும் இன்று முதல் ஒழிப்புப் பணிகள் முன்னெடுப்பு

கொழும்பு, செப். 21

டெங்கு நோய்த் தொற்று ஒழிப்பு வாரம் மீண்டும் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்கள், வைத்தியசாலைகள் உட்பட ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

நுளம்புப் பெருக்கமுள்ள பகுதிகளை இனங்கண்டு அவற்றை மட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை டெங்குநோய்த் தொற்று உள்ள 34 வலயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் இதுவரை டெங்கு நோய் பரவல் இல்லாத இடங்களுக்கும் இந்த நோய் பரவும் சாத்தியம் உள்ளது என்பதால் இன்றுமுதல் இந்த நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொள்ள முடிவு செய்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் முரளிதரனின் கார் கொழும்பில் விபத்தில்

கொழும்பு, செப். 21

தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

வவுனியாவில் நடைபெற்ற அகதிகள் மீள்குடியமர்வு நிகழ்வில் பங்குகொண்டு விட்டு, அவர் தமது குண்டு துளைக்காத காரில் கொழும்பு திரும்பிக்கொண்டிருக்கையில் கொழும்புக்கு சமீபமாக பஸ்ஸுடன் அவரது கார் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரின் சாரதியும், மெய்ப்பாதுகாவலரும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

## சொல்ஹெய்மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோசலிஸ்ட் லெவ்ட் கட்சி தனது அமைச்சுப் பதவியொன்றை இழக்கக்கூடும் என அந்நாட்டு ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

மீண்டும் அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டுள்ள பிரதமர் ஜென் ஸ்டொல்டென் பேர்க் தலைமையிலான தொழிற்கட்சி சோசலிஸ்ட் கட்சியின் கருத்துக்களை இனிவரும் காலங்களில் முன்னர் போன்று சிரத்தையுடன் செவிமடுக்காது ஆளும் கட்சியிலிருந்து சோசலிஸ்ட் கட்சி அகற்றப்படலாம் என்ற ஊகங்களும் வெளியாகியுள்ளன.

தற்போது சோசலிஸ்ட் லெவ்ட் கட்சியின் தோல்வியே ஒஸ்லோவில் அதிகம் விவாதிக்கப்படும் விடயமாக மாறியுள்ளது.

இம்முறை நோர்வேயிலுள்ள தமிழர்கள்அக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை. எரிக்சொல்ஹெய் முக்கு பெருமளவு ஆதரவை வழங்கியவர்கள் இம்முறை அவரைக் கைவிட்டுள்ளனர். பலர் அவருக்கு எதிராக பகிரங்கப் பிரச்சாரத்திலும் ஈடுபட்டனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், தாம் உலகம் முழுவதும் தமிழர்களுக்காக குரல் கொடுத்ததை நோர்வே தமிழர்கள் அறிவார்கள் என்றும்-

அதற்காகவே தாமும் தமது கட்சியும் இலங்கை அரசால் விமர்சிக்கப்பட்டார்கள் என்றும் சொல்ஹெய்ம் கூறுகிறார்.

''கொழும்பின் வீதிகளில் என்னைப் பயங்கரவாதி என்று சித்திரித்து பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. தமிழர்களுக்காக அதிகளவு குரல் கொடுத்தமையாலேயே இவ்வாறு சித்திரிக்கப்பட்டேன்'' எனவும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## இலங்கையின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு எடுத்துள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் உறுதிப் படுத்தும் வரை இலங்கைக்கான சிலவகை நிதியுதவிகளை வழங்கக் கூடாது என்ற திருத்தச்சட்டமூலமொன்றை அமெரிக்க செனட்டர்கள் சிலர் சமீபத்தில் கொண்டுவந்திருந்தனர்.

இலங்கையின் யுத்தக்குற்றங்கள் குறித்த அறிக்கை இந்த திருத்தச் சட்டங்களை அடியொற்றியே அமைந்துள்ளது.

இதேவேளை,அமெரிக்க வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள், இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக பலரைத் தொடர்பு கொண்டு முக்கிய வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகின் பல பகுதிகளில் இடம்பெற்ற அட்டூழியங்கள் குறித்த அமெரிக்காவின் கொள்கையை வகுப்பதற்கு அந்நாட்டின் யுத்தக்குற்ற அலுவலகம் உதவுவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா யுத்த குற்றங்களுக்கான தமது தூதுவராக, ஸ்டீபன் ராப் என்பவரை நியமித்துள்ளார். அவர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனுக்கு இதுகுறித்து நேரடியாகப் பதிலளிப்பார்.

சமீபத்தில் 'டைம்ஸ்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் , தமது அலுவலகம் இலங்கை குறித்து தற்போது கவனம் செலுத்துகிறது என்றும், 21 ஆம் திகதி இதுகுறித்த அறிக்கை கையளிக்கப் படுமென்றும் ஸ்டீபன் ரப் தெரிவித்திருந்தார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வலுப்படுத்த ஜனாதிபதி திட்டம்?

கொழும்பு, செப். 21

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இன்னமும் வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார் என்று தெரியவருகிறது.

அவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மேலும் உயிரூட்டுவது தொடர்பாக அண்மையில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் அலரி மாளிகையில் பேச்சில் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இச்சந்திப்பின்போது அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் நடைமுறைப் படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான அதிகாரங்கள் இலங்கைக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது குறித்து முதலில் அறியப்படவேண்டும் என்ற முடிவுக்கு இருவரும் வந்துள்ளார்கள்.

## வவுனியா ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, தேசிய நல்லிணக்க அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்ட நிகழ்வில் வைத்து அவர் கள் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான சகல வசதிகளும் அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்தன.

தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்களே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். (அ-1)

## வடக்கு வீரர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற வட மாகாண விளையாட்டுவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சிறந்த ஆரம்பத்துடன் தொடங்கிய வட மாகாண விளையாட்டுவிழா நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விடிவெள்ளியாக இருக்கும் எனக்கருது கின்றேன். வடக்கின் வசந்தத்தின் திட்டத் தில் முன்னெடுக்கப்பட்ட இவ்விழா ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசியுடன் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தமகிழ்ச்சி நீண்டதாகவும் நிலையானதாகவும் இருக்கவேண்டும் என்பதே எல்லோரது விருப்பமாகும். - எனறார் (அ-1-06)

## வன்னி அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது குறித்த தனது கடும் கவலையை இந்திய அரசு வெளியிட்டுள்ளமையால் அகதிகள் விடயத்தில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வாரம் சந்தித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதை துரிதப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விடுத்த வேண்டுகோளுடனேயே அலோக் பிரசாத் ஜனாதிபதியைச் சந்தித்தார்.

இதேவேளை, இந்தியாவின் அதிருப்தியைத் தெரிவிக்கும் விதத்தில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றமை பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என அந்தக் கடிதத்தில் நாராயணன் அச்சம் வெளியிட்டுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இந்த விடயங்கள் குறித்து கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இலங்கையின் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது.

## முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இயங்கி வரும் 17 முக்கிய தொண்டு நிறுவனங்கள் கூட்டாக இணைந்து எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள 2 லட்சத்து 60 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்களது பாதுகாப்பு மற்றும் வாழ்வதற்கான உரிமை ஆகியவற்றை உறுதி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி ஒப்பீட்டளவில் லேசான மழை பெய்த போதிலும் நான்கு இடைத்தங்கல் முகாம்களில் வெள்ளம் ஏற்பட்டது எனவும், எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் பாரிய அனர்த்தங்கள் ஏற்படக் கூடும் எனவும் தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

உறவினர்களுடன் இணைந்து கொள்ள விரும்புவோருக்கு சந்தர்ப்பம் அளித்தல், மீள் குடியேற்றுதல் போன்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் சுதந்திரமாக இடம் நகர்வதற்கான உரிமை உறுதிப்படுத்த வேண்டுமென அந்த அறிக்கையில் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்களைத் தம்முடன் தங்க வைத்துக் கொள்ள விரும்பும் உறவினர்களுக்குச் சரியான முறையில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என தொண்டு நிறுவனங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக மனிக் பாம் முகாமில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தொண்டு நிறுவனங்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளன. (அ-சி)

## ரஷ்யா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னார்வத் தொண்டு ஊழியர்கள் என்ற போர்வையில் பல ரஷ்ய உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் எனவும், சுமார் 35 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வவுனியா அகதி முகாமில் கைதுசெய்யப்பட்ட பிரபாகரனின் சிரேஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்தெந்த நிறுவனங்களினால் ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்கள் என்பது குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

2004ஆம் ஆண்டில் சுமார் ஒரு மாத கால பயிற்சி நெறி வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 10 வருடங்களாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக மேலும் 20 ஈழ அகதிகளும் போராட்டத்தில் இணைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டம் இருப்பவர்கள் முகாமில் வசதி குறைவு என்பதையே வற்புறுத்துகின்றனர். வேறு எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை எனப் பொலிஸாரும் வருமான வரி அதிகாரிகளும் தெரிவித் தனர்.

ஆனால் தமது உறவினர்களுடன் இணைவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரியே அகதிகள் உண்ணா விரதம் இருக்கின்றனர்.

வெவ்வேறு இடங்களில் இருந்து அழைத்து வரப்பட் டுள்ளதால் அவர்கள் மீதான விசாரணைகளை விரைவு படுத்த முடியாதுள்ளது என நீதித்துறை அதிகாரிகள் கூறியதாக தமிழக ஊடகங்கள் தெரி விக்கின்றன. (அ-1)

## தொலைபேசி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டைவிட்டு வெளியேறும்படி இலங்கை அரசு உத்தரவிட்டிருந்தது.

அவர் விடுதலைப் புலிகளின் பரப்புரைக்கு ஆதரவாக ஊடகங்களுக்குத் தக வல்கள் வழங்கி வந்தார் என அரச அதி காரிகள் குற்றம்சாட்டினர்.

இந்த மாதம் 7 ஆம் திகதிக்குள் அவர் வெளியேற வேண்டும் என்று அரசு உத் தரவிட்டிருந்தது. ஆனால் அவர்கேட்டுக்கொண்டதை அடுத்து இன்று வரை அவர் நாட்டில் தங்கியிருப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து எல்டருக்கு அநாமதேய மிரட்டல் தொலைபேசி அழைப்புக்கள் பல விடுக்கப்பட்டன என்றும், அதனால் ஐ.நாவின் உள்ளூர் பாதுகாப்பு அதிகாரியிடம் மிரட்டல்கள் குறித்து முறையிட்டுவிட்டு, திட்டமிடப்பட்டதற்கு மூன்று நாள்களுக்கு முன்னதாகவே அவர் கொழும்பில் இருந்து புறப்பட்டு விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாத காலத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட இரண்டாவது ஐ.நா. அதிகாரி ஜேம்ஸ் எல்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று வாரங்கள் முன்னதாக ஐ.நா.வின் மற்றொரு அதிகாரியான பீற்றர் மக்கெய்ன் வெளியேறி இருந்தார். அவருக்கான விசாவை நீடிப்பதற்கு இலங்கை அதிகாரிகள் மறுத்ததைத் தொடர்ந்தே அவர் வெளியேறினார்.

எனினும், மக்கெய்னின் விவகாரம் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் நாட்டின் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பி.பி.அபயக்கோனும் தெரிவித்தமை அறிந்ததே. (அ-சி)


BIT @ MIS
7 years of continuous experience in teaching BIT
Installment Payment
Semester - 1
Semester - 3
Semester - 5
Register Now
For semester 1
Commences on 26 / 09 / 2009 at 7.00 am - 9.00 am
#74, Sabapathy Lane, Thalaiyaali, Jaffna. TP.NO: 060 221 6083
By Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)
Be practical as well as theoretical in IT. Don't MISs IT

34000/- • Intel Pentium 2.8 Ghz • Asrock G31 Mother Board • Kingston 512 MB DDR II RAM • 160 GB SATA Hard Disk • ATX Casing • 15" LG Monitor • Asus CD ROM • Keyboard • Optical Mouse • Multimedia Speaker
35500/- • Intel Pentium 2.8 Ghz • Asrock G31 Mother Board • Kingston 1 GB (800) RAM • 320 GB SATA Hard Disk • ATX Casing • 15" LG Monitor • Samsung DVD ROM • Keyboard • Optical Mouse • Multimedia Speaker
42000/- • Intel Pentium 2.5 Ghz Duo Core • Foxconn Mother Board • Kingston 1 GB (800) RAM • 320 GB SATA Hard Disk • ATX Casing • 15.6" LCD Monitor • DVD Writer • Keyboard • Optical Mouse • Multimedia Speaker
48500/- • Intel Pentium 2.6 Ghz Duo Core • Foxconn / Asrock Mother Board • Kingston 1 GB (800) RAM • 320 GB SATA Hard Disk • ATX Casing • 17" (16.9) LCD Monitor • DVD Writer • Keyboard • Optical Mouse • Multimedia Speaker • UPS 650 W
58500/- • Intel Core 2 Duo 2.8 Ghz • Intel Original DG 31 PR Motherboard • Kingston 2 GB (800) RAM • 320 GB SATA Hard Disk • ATX Casing • 17" (16.9) DELL LCD Monitor • DVD Writer • Keyboard • Optical Mouse • UPS 650 W • Multimedia Speaker
59500/- • Intel Core 2 Duo 2.53 Ghz • Asus P5KPL-Am Motherboard • Kingston 2 GB (800) RAM • 320 GB SATA Hard Disk • ATX Casing • 19" LCD Monitor • DVD Writer • Keyboard • Optical Mouse • Multimedia Speaker • UPS 650 W
NETWORK
COMPUTER TABLE 2700/-
HSDPA Prolink Modem (Sim) Broadband 3.5 G USB 9500/-
WEB CAMERA 990/-
ACER LAPTOP • Intel Pentium 2.0 Duo Core • 160 GB SATA Hard Disk • 1 GB DDR II RAM • DVD Writer • Webcam • Bluetooth • Modem 56 K • WiFi • Bag 72900/- One Year International Warranty
SONY PENDRIVE MP3 PLAYER 2 GB 3900/-
* Warranty Value 1-3 years * Stock Available
MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/பக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk

BITSMANS கல்விநிறுவனம்மானிப்பாய் A/L 2010 நாடகமும் அரங்கியலும் PAPER CLASS ஆசிரியர் திரு. மங்களேஸ் B.A (Hons) ஆரம்பம் - 23.09.2009 புதன் காலை 6.15

அங்கீகரிக்கப்பட்ட குறைந்த கட்டணத்தில் தரமான, முழுமையான கணனிக் கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம் 21/9/2009, 23/9/2009, 26/9/2009 TIME 10.00 a.m.
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ்ஹோல் அருகாமை) Tel. 021-222 4403

வீடு வாடகைக்கு தேவை
நிறுவனம் ஒன்றின் அலுவலகப்பாவனைக்கு பலாலி வீதி அல்லது யாழ் நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.
வாடகைக்கு கொடுக்க விரும்பும் வீட்டு உரிமையாளர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
Thas :- 0777 - 110862

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் ஹெற்
259. கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
இப்பொழுது ! வாடிக்கையாளரின் நலன்கருதி வடமராட்சியிலும் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 01

## மாவட்ட வலம் - திருமலை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - I 81-T-I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
* 1 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. வணிகம் எனக் குறிப்பிடப்புடுவது,
1. உயர்இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு மேற்கொள்ளும் ஒரு கருமம்.
2. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்கின்றகருமம்.
3. பல்வேறு நபர்களுக்கிடையிலான வர்த்தக உடன்பாடு.
4. மனிதனது தேவைப்பாடுகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்யக்கூடிய ஏதேனுமொரு செயற்பாடு.

02. SWOT ஆய்வு என்பதால் நீர் விளங்குவது,
1. பலம், வினைத்திறன், பலவீனம், வாய்ப்பு பற்றிய ஆய்வு.
2. பலம், வினைத்திறன், வாய்ப்பு, பலவீனம் பற்றிய ஆய்வு.
3. பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் பற்றிய ஆய்வு.
4. பலம், பலவீனம், வாய்ப்பு, புரள்வு பற்றிய ஆய்வு.

03. சந்தைப்படுத்தலை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படும் உற்பத்தி,
1. நேரில் உற்பத்தி 2. சேவை உற்பத்தி
3. நேர் உற்பத்தி 4. கேள்வி அடிப்படையிலான உற்பத்தி

04. சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது,
1. மூலதனம் + நீண்டகாலப்பொறுப்பு + சொத்து = நடைமுறைப்பொறுப்பு
2. மூலதனம் + நடைமுறைப்பொறுப்பு = சொத்து + வருமானம்
3. மூலதனம் + நீண்டகாலப்பொறுப்பு = சொத்து + செலவு
4. மூலதனம் + நீண்டகாலப்பொறுப்பு - நடைமுறைச்சொத்து = நடைமுறைப்பொறுப்பு

05. காசோலை மூலமான கொடுப்பனவு ஒன்றுக்கான சான்றாக அமைவது,
1. வரவுத்தாள் 2. கிரயப்பட்டியல் 3. எதிர்த்தாள் 3. செலவுத்தாள்

06. மொத்த நேர்க்கிரயத்தில் உள்ளடங்குபவை,
1. நேர்ப்பொருட்கிரயம் + நேரிற்பொருட்கிரயம் + மேந்தலைக்கிரயம்
2. நேர்ப்பொருட்கிரயம் + நேர் உழைப்புக்கிரயம், நேரில் செலவுக்கிரயம்
3. நேர்ப்பொருட்கிரயம் + நேர் உழைப்புக்கிரயம் + நேர்செலவுக்கிரயம்
4. நேர்ப்பொருட்கிரயம் + மேந்தலைக்கிரயம் + உற்பத்திக்கிரயம்

07. கிடைத்த கழிவீட்டிற்கான இரட்டைப்பதிவு,
1. கிடைத்த கழிவீட்டுக்கணக்கு வரவு, கடன்பட்டோன் கணக்கு செலவு
2. கிடைத்த கழிவீட்டுக்கணக்கு வரவு, கடன்கொடுத்தோன் கணக்கு செலவு
3. கடன்பட்டோன் கணக்கு வரவு, கிடைத்த கழிவீட்டுக்கணக்கு செலவு
4. கடன்கொடுத்தோன் கணக்கு வரவு, கிடைத்த கழிவீட்டுக்கணக்கு செலவு

08. வணிக வங்கிகளையும் ஏனைய வங்கிகளையும் பேதப்படுத்திக்காட்டும் அம்சம்,
1. நடைமுறை வைப்பை ஏற்றுக்கொள்ளல்.
2. தவணை வைப்பை ஏற்றுக்கொள்ளல்.
3. சேமிப்பு வைப்பை ஏற்றுக்கொள்ளல்.
4. நிலையான வைப்பை ஏற்றுக்கொள்ளல்.

09. துணைநிலைச்சேவை ஒன்றாகக்கருத முடியாதது எது?
1. மொத்தவியாபாரம் 2. காப்புறுதி
3. போக்குவரத்து 3. தொடர்பாடல்

10. காகிதாதிசெலவுக்காக கொடுப்பனவு செய்த 500 ரூபா மின்சாரக்கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இது எவ்வகை வழுவாகும்?
1. விடுபட்ட வழு 2. பக்கம்மாறிப்பதிதல் வழு
3. கணக்குமாறிப்பதிதல் வழு 3. கோட்பாட்டு வழு

11. நிறுவனம் ஒன்றில் தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதியானது இணங்கவில்லை. இவ்வித்தியாசம் தற்காலிகமாக எதில் பதிவிடப்படும்?
1. மூலதனக் கணக்கு 2. தொங்கல் கணக்கு
3. வருமானக் கணக்கு 4. வியாபாரக் கணக்கு

12. விற்பனைக்குத் தயாரான சரக்கின் பெறுமதி - இறுதியிருப்பு என்பதன் பெறுபேறு,
1. மொத்தலாபம் 2. விற்பனைக்கிரயம்
3. தேறியலாபம் 4. மொத்தநட்டம்

13. பின்வரும் மீதிகளையும் ஏனைய தகவல்களையும் கொண்டு இலாபநட்டக்கணக்கில் காட்டப்படவேண்டிய ஐயக்கடன் ஏற்பாட்டுத்தொகை எவ்வளவு?
பரீட்சைமீதியிலுள்ள ஐயக்கடன் ஏற்பாட்டுத்தொகை - 400 ரூபா
கடன்பட்டோர் மீதி - 10,000 ரூபா
ஐயக்கடன் ஏற்பாடானது கடன்பட்டோரில் 5% ஆக இருத்தல்வேண்டும்.
1. 500 ரூபா 2. 400 ரூபா 3. 100 ரூபா 4. 600 ரூபா

14. இலங்கையில் வரியினை அறவிட்டுக்கொள்ளும் அமைப்பாகக் காணப்படுவது,
1. சுங்கத்திணைக்களம் 2. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
3. வரித்திணைக்களம் 4. வரி அதிகாரசபை

15. வியாபார நோக்கமற்ற நிறுவனம் ஒன்றின் முற்பணச் சந்தா என்பது,
1. ஒரு சொத்தாகும் 2. ஒரு பொறுப்பாகும்
3. ஒரு செலவாகும் 4. ஒரு வருமானமாகும்

16. ஐந்தொகை ஒன்றில் திரவச்சொத்தாக அமைவது,
1. இறுதியிருப்பு, கடன்பட்டோர், வருமதி உண்டியல், வங்கிமீதி.
2. இறுதியிருப்பு, முதலீடு, கடன்பட்டோர், காசுமீதி.
3. கடன்பட்டோர், முற்பணவாடகை, வங்கிமீதி, காசுமீதி.
4. சென்மதி விளம்பரம், இறுதியிருப்பு, காசுமீதி, வங்கிமீதி.

17. ஐந்தொகை தயாரிக்கும்போது ஐந்தொகையில் வணிகத்தின் பெயரை எழுதிக்கொள்வது வழக்கம். இந்த நடைமுறையுடன் தொடர்புடைய எண்ணக்கரு,
1. கிரய எண்ணக்கரு 2. அலகுசார் எண்ணக்கரு
3. இணைத்தல் எண்ணக்கரு 4. தொழில் முழுமைக்கூற்று எண்ணக்கரு


18. வணிகர் ஒருவர் சிறந்த போக்குவரத்து முறையைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை,
1. கிரயம், வேகம், இயலளவு, வழி 2. சாதனம், வழி, சக்தி, தரிப்பிடம்
3. கிரயம், வேகம், இயலளவு, பாதுகாப்பு
4. காலம், சொகுசு, வழி, சக்தி

19. தரவுகளானவை எவ்வகையில் தகவல்களாக்கப்படுகின்ன?
1. தரவு சேகரித்தல்
2. தரவுத்தள அமைப்புமுறை
3. தரவு நிரற்படுத்தல்
4. தரவு பயன்பாடும் களஞ்சியப்படுத்தலும்

20. அல்பா கம்பனியிடமிருந்து 500 ரூபாவிற்கு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக 3,000 ரூபா செலுத்தப்பட்டது. இத்தொகையை செலுத்தும்போது எழுதப்படும் பதிவு.
1. அல்பா கம்பனி கணக்கு வரவு, காசுக் கணக்கு செலவு
2. காசுக் கணக்கு வரவு, அல்பா கம்பனி கணக்கு செலவு
3. கொள்வனவுக் கணக்கு வரவு, அல்பா கம்பனிக் கணக்கு செலவு
4. காசுக் கணக்கு வரவு, கொள்வனவுக் கணக்கு செலவு

21. இலங்கையிலிருந்து பொருட்களை கடல்மார்க்கமாகக் கொண்டுசெல்லும்போது பயன்படுத்தப்படும் ஆவணம்
1. நாணயக் கடிதம் 2. வார்நாமம்
3. விலைமனுக்கோரல் அட்டவணை 4. தாற்று வாய்ச் சான்றிதழ்

22. பின்வருவனவற்றுள் எது சிறப்புமுறைக் குறுக்குக்கோடிடலாக அமைகிறது?




23. முகாமைத்துவக்கருமங்களில் ஒன்றான திட்டமிடல் தொடர்பான பொருத்தமான கூற்று.
1. இது முடிவடைந்த காலத்துடன் தொடர்புடையது.
2. இது நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்துடன் தொடர்புடையது.
3. இது எதிர்வரும் காலத்துக்குரியதுடன் தொடர்புடையது.
4. இது முடிவடைந்த காலத்தின் இறுபலத்துடன் தொடர்புடைய நிகழ்கால முன்னுணர்வுடன் தொடர்புடையது.

24. பின்வருவனவற்றுள் எதனைக் கொள்வனவு செய்வது நியாயமான நீண்டகால முதலீடாகக் கொள்ளப்படும்?
1. காணிகட்டடக் கொள்வனவு 2. அடகு பிடித்தல்
3. திறைசேரி உண்டியல் 4. திறைசேரி முறிகள்

25. கணினி ஒன்றின் வன்பகுதியாகக் கருதப்படாதது,
1. வின்டோஸ் 2007 2. சாவிப்பலகை (Key Board)
3. மொனிற்றர் 4. தாய்ப்பலகை (Mother Board)

* பின்வரும் தகவல்களைக் கொண்டு 26-28 வரையான வினாக்களுக்கு விடைதருக.

P - காணி கட்டடங்கள் 200,000 ரூபா
Q - மோட்டார் வாகனம் 100,000 ரூபா
R - கடன்பட்டோர் 10,000 ரூபா
S - கடன்கொடுத்தோர் 5,000 ரூபா
T - கைவசமுள்ளகாசு 22,000 ரூபா
U - வங்கி மீள்வரையல் 3,000 ரூபா
V - முற்பணக்காப்புறுதி 500 ரூபா
W - 10% வங்கிக் கடன் 15,000 ரூபா
X - முடிவுக்கையிருப்பு 12,000 ரூபா

26. மொத்த நடைமுறைச்சொத்தின் பெறுமதி யாது?
1. 44,500 ரூபா 2. 47,500 ரூபா 3. 52,500 ரூபா 4. 42,500 ரூபா

27. திரவச்சொத்தின் ஒழுங்கு,
1. TRVX 2. XRVT 3. VTXR 4. XVTR

28. மொத்த நடைமுறைப்பொறுப்பின் பெறுமதி யாது?
1. 18,000 ரூபா 2. 20,000 ரூபா 3. 8,000 ரூபா 4. 17,000 ரூபா

29. கடைப்பண்டங்களை மாத்திரம் கொண்ட தொகுதி,
1. தீப்பெட்டி, பாண், சீனி, பிஸ்கற்
2. தேயிலை, பொறி, வானொலிப்பொட்டி, சலவை இயந்திரம்
3. வாகனம், தையல் இயந்திரம், வானொலிப்பெட்டி
4. தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி, வாகனம்

30. முயற்சியாளன் ஒருவனின் பிரதான தொழிற்பாடு ஒன்று,
1. இலாபங்களை உயர்வாக்கல் 2. புத்தாக்கம் புனைதல்
3. வணிகமுகாமையில் பங்குபற்றுதல் 4. கூலி நிர்ணயம் செய்தல்

31. கடன்படுநர் ஒருவருக்காக வழங்கப்படும் கழிவு,
1. பெற்றகழிவு 2. அன்பளிப்புகள்
3. கணியக்கழிவு 4. விளையாட்டுப்போட்டி வருமானம்

32. தளபாடத்தின் கொள்விலை 50,000 ரூபா. இதற்கான பெறுமானத்தேய்வு 2,500 ரூபா எனின், பெறுமானத்தேய்வு வீதம் யாது?
1. $7\frac{1}{2}\%$ 2. 5% 3. $3\frac{1}{2}\%$ 4. $15\frac{1}{2}\%$

33. பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட பொதுக்கம்பனிகள் தமது பங்குகளையும் தொகுதிக் கடன் பத்திரங்களையும் கொள்வனவு-விற்பனை செய்யும் இடம்,
1. பங்கு அத்தாட்சி நிறுவனம் 2. பங்குத் தரகர் சங்கம்
3. பங்கு விற்பனை சங்கம் 4. பங்குச் சந்தை

34. பொதுக்குறிப்பேடு எனப்படுவது,
1. நாளாந்த கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான ஏடு.
2. வணிகத்தின் பொதுவான செலவுகளைப் பதிவு செய்வதற்கான ஏடு.
3. பதிவேடுகள் எதிலும் பதியப்படாத கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்கான ஏடு.
4. காசுப் பெறுவனவுகளையும் கடன் விற்பனைகளையும் பதியும் ஏடு.

35. கடன் கொடுத்தோனிடமிருந்து கிடைத்த கழிவீட்டைப் பதிவு செய்வதற்கான ஏடு,
1. விற்பனை நாளேடு 2 மூன்று நிரற் காசேடு
3. கொள்வனவு நாளேடு 4. பொது நாட்குறிப்பேடு

36. பின்வரும் தொகுதியினுள் வசதிப்பண்டத்தை தெரிவுசெய்க.
1. பாதணிகள் 2. தளபாடமும் பொருத்துக்களும்
3. தொலைக்காட்சிப்பெட்டி 4. வர்த்தகச் சஞ்சிகை.

37. நுகர்வோன் ஒருவனின் பொறுப்புள்ள அம்சமாக அமைவது,
1. தகவல்களை அறிந்துகொள்ளல் 2. பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளல்
3. சமூகத்தின் மீதான அக்கறை 4. தெரிவு தொடர்பான திறன்

38. தளபாட உற்பத்திக் கம்பனியொன்றில் தளபாடத்தை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் அரிமரம் என்பது,
1. நேர்பொருள் 2. நேரில்பொருள்
3. குறைவேலைப்பொருள் 4. பூர்த்திப்பொருள்

39. ஒரு வணிக நிறுவனத்தின் அகச்சூழல் காரணிகளாக அமையக்கூடிய தொகுதி,
1. நிறுவன உரிமயாளர், புவிசார்சூழலும் அரசியல்சார்சூழலும்.
2. மக்கள் சூழல், தொழில்நுட்பம் சார்ந்த சூழல், முகாமைசார் சூழல்.
3. முகாமைசார் சூழல், நிறுவன உரிமையாளர்கள், நிறுவன ஊழியர்கள்.
4. நிறுவன ஊழியர்கள், பொருளாதாரம் சார்ந்த சூழல், சட்ட ஒழுங்குகள் தொடர்பான சூழல்.

40. நாணயத்தினை மத்திய வங்கியின் அனுசரணையுடன் வெளியீடுசெய்யும் அமைப்பு,
1. வணிக வங்கிகள்
2. தோமஸ்மீலாநுாய் அன் கம்பனி லிமிட்டட்
3. பிறைட் புறு வில்கின்சன் கம்பனி லிமிட்டட
4. வர்த்தகர் வங்கி

வணிகக்கல்வியும் கணக்கீடும் 11 அடுத்த பக்கத்தில்.......

"2009 க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்காக [illegible] விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான படைப்பு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகக் கல்வியும் கணக்கீடும் - II　81-T-II

* **முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
   1) வணிக நிறுவனங்கள் "வியாபாரவிழுமியங்களை" கடைப்பிடித்தல் அவசியமான ஒன்றாகும். இக்கூற்றின்படி வியாபாரவிழுமியங்கள் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது என்ன? வணிக நிறுவனங்களினால் பின்பற்றப்படவேண்டிய வியாபார விழுமியங்களைப் பட்டியற்படுத்துக.
   2) ஐந்தொகையில் மூலதனத்தொகையானது பொறுப்பாகக்காட்டுவதுடன் தொடர்புடைய எண்ணக்கரு எதனை வலியுறுத்தி நிற்கின்றது?
   3) வணிகர் ஒருவர் வணிக வங்கி ஒன்றில் நடைமுறைக்கணக்கைப் பேணிவருவதால் பெற்றுக்கொள்கின்ற நன்மைகளைக் குறிப்பிடுக.
   4) இலாபநோக்கமற்ற நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் கணக்குகளாக பெறுவனவுக் கொடுப்பனவுக்கணக்கு, வருமானச்செலவுக்கணக்கு என்பவற்றைக் குறிப்பிடலாம் இத்தகைய இரு கணக்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
   5) நுகர்வோன் ஒருவன் SLS குறியினைக்கொண்ட பண்டத்தினைக் கொள்வனவு செய்வதனால் பெற்றுக்கொள்கின்ற நன்மைகளைக் குறிப்பிடுக.
   6) "தொழிற்பகுப்பு என்பது சிறப்புத்தேர்ச்சிக்கு இட்டுச்செல்கின்றது" இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்கான காரணத்தை முன்வைக்குக.
   7) இலத்திரனியல் தொழில்நுணுக்கம் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
   8) குறித்த நிதியாண்டு முடிவில் வணிக நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்களைத் தயார் செய்கின்றன. இத்தகைய நிதிக்கூற்றுக்கள் மீது அக்கறை கொள்ளும் தரப்பினரைக் குறிப்பிடுக.
   9) காப்புறுதி ஒப்பந்தத்தில் தொடர்புடைய கட்சியினரைக் குறிப்பிடுக.
   10) மொத்த நேர்க்கிரயம் 132,000 ரூபா
      பொது மேந்தலைக்கிரயம் 24,000 ரூபா
      உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை 50 ஆகும்
      இலாப எல்லை முழுக்கிரயத்தில் 20% ஆகும்
      பின்வருவனவற்றைக் கணிக்குக.
      1. முழு விற்பனைப்பெறுமதி.
      2. அலகு ஒன்றிற்கான விற்பனை விலை
   11) வியாபாரத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
   12) வருமானச்செலவு, மூலதனச்செலவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை தகுந்த உதாரணங்களுடன் குறிப்பிடுக.
   13) விற்பனைக்கிரயத்தின் சேர்வைகளைக் குறிப்பிடுக.
   14) முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.
   15) இலங்கையில் முதலீட்டு மூலகங்கள் முறைமையான விதத்திலும் முறைமை சாராத விதத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளுக்குப் பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிடுக.

02.



   1) மேலுள்ள பாய்ச்சல்கோட்டுப்படமானது வர்த்தகத்துடன் தொடர்புடையதாகும். வெற்றுக்கூடுகளுக்கு பொருத்தமான உருப்படிகளை எழுதுக.
   2) "வணிகநிறுவனங்களால் நுகர்வோனானவன் ஏமாற்றப்படுகிறான்" இத்தகைய கூற்றுக்குப் பொருத்தமான காரணங்களை முன்வைக்குக.
   3) நுகர்வோனை பாதுகாக்கும் முகமாக உள்ள சட்ட ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.
   4) வணிகர் ஒருவர் தனது செயற்பாடுகளின்போது பாவிக்கத்தக்க பணப்பதிலீடுகளைக் குறிப்பிடுக.
   5) தனிவியாபார அமைப்பானது பங்குடமையுடன் ஒப்பிடும்பொழுது எத்தகைய நன்மைகளைக் கொண்டுள்ளது? எனக் குறிப்பிடுக.

03. 1) உமது நண்பர் ஒருவர் 5 மில்லியன் ரூபாவினை முதலீட்டு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளார். இத்தீர்மானம் தொடர்பாக உமது நண்பருக்கு வழங்கத்தக்க ஆலோசனைகளைக் குறிப்பிடுக.
   2) கனீஸா தனது வியாபார நிலையத்தில் தான் பயன்படுத்தும் கட்டடத்திற்கு சேஸா காப்புறுதிக்கம்பனியில் 8000,000 ரூபா பெறுமானத்திற்கும் கித்துஸா காப்புறுதிக்கம்பனியில் 5000,000 ரூபாவிற்கும் காப்புறுதி செய்துள்ளார். இக்கட்டடத்திற்கு ஆண்டுக்காலத்தில் 200,000 ரூபா சேதம் ஏற்பட்டது.
      அ. கனீஸா நட்டம் தொடர்பாக எவ்வாறு இழப்பீட்டுத்தொகை பெறுவார் எனக் குறிப்பிடுக.
      ஆ. இழப்பீடு வழங்கப்படும்போது காப்புறுதியுடன் தொடர்புடைய தத்துவங்களைக் குறிப்பிடுக.
   3) உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு அங்குள்ள களஞ்சியப் பகுதியானது மூலப்பொருட்களை உரிய நேரத்திற்கு வழங்காமையால் ஏற்படுகின்ற பிரதிகூலங்கள் 3 ஐக் குறிப்பிடுக.
   4) நுகர்வோன் தரமான பொருட்களை வாங்கும்முகமாக பயன்படுத்துகின்ற ஊடகங்கள் 3 ஐக் குறிப்பிடுக.
   5) திறைசேரி உண்டியலுக்கும் திறைசேரிமுறிக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகளைக் குறிப்பிடுக.

04. 1) நவீன தொடர்பாடல் முறைகளுள் ஒன்றான "தரவுத் தொடர்பாடல்" என்பதால் நீர் விளங்கிக்கொள்வது என்ன?
   2) வர்த்தக வங்கியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வைப்புக்களாக சேமிப்புவைப்பு, நிலையான வைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.
      இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
   3) முகாமைத்துவ கருமங்களைக் குறிப்பிடுக.
   4) முதல்தர முகாமையாளர்களுக்கு உதாரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
   5) பெறுமதிமிக்க வழங்களை அடிப்படையில் 5 பகுதிகளாகப் பாகுபடுத்தலாம். இவை எனக் குறிப்பிடமுடியும். அவற்றினைப் பட்டியலிடுக.

05. 1) "கோட்பாட்டு வழு" என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது? அதற்கு உதாரணம் ஒன்றைக் குறிப்பிட்டு திருத்தப்பதிவினையும் எழுதுக.
   2) பின்வரும் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.
      - உட்திரும்பல் 10,000 ரூபா
      - கடன்கொள்வனவு 40,000 ரூபா
      - வெளித்திரும்புல் 5,000 ரூபா
   3) சொத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தவும், பொறுப்பில் அதிகரிப்பினை ஏற்படுத்தவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொடுக்கல்வாங்கல்களைக் குறிப்பிடுக.
   4) உற்பத்தி நிறுவனம் ஒன்றில் காணக்கூடிய மூன்றுவகையான இருப்பு வகைகளைக் குறிப்பிடுக.
   5) பின்வரும் கொடுக்கல்வாங்கல்களை கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைப் பொருத்தமான நிரல்எண்களுடன் நேர்க்கணிய (+) அல்லது எதிர்க்கணிய (-) அடையாளங்களைப் பயன்படுத்திக் காட்டுக.

| கணக்கீட்டுக் கொடுக்கல்வாங்கல் | மூலதனம் (ரூபா) | பொறுப்பு (ரூபா) | சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | காசு (ரூபா) | இருப்பு (ரூபா) | உ.தொகுதி (ரூபா) |
| 1. ஓர் உரிமையாளர் வணிக முயற்சியில் 25,000/= வை முதலீடு செய்தார். | | | | | |
| 2. 10,000/= இற்கு மீள் விற்பனைப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | | | | | |
| 3. 2,000/= கிரயமான பண்டங்கள் 2,500/= உடன் காசுக்கு விற்கப்பட்டன. | | | | | |
| 4. ஹாகல கம்பனியிடம் இருந்து 20,000/= இற்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | | | | | |
| 5. வணிக முயற்சியின் உபயோகத்திற்கென 15,000/= பெறுமதியான மின்தராசு விஸ்ஸா கம்பனியிடமிருந்து கொ/வு செய்யப்பட்டது. | | | | | |
| 6. விஸ்ஸா கம்பனிக்கு ரூபா 10,000 செலுத்தப்பட்டது. | | | | | |

06. 1) ஓர் ஆக்கக்கணக்கைத் தயாரிப்பதன் மூலம் உற்பத்தியாளர் ஒருவர் பெறக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிடுக.
   2) அலகுக்கிரயம் + முழுக்கிரயம் / ................................ வெற்றிடத்தை நிரப்புக.
   3) தச்சுத்தொழிற்சாலை ஒன்றில் 2008 ஜனவரியில் கிரய விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| அரிமரம் | 60,000 | |
| தச்சன் கூலி | | 15,000 |
| தச்சுத்தொழிற்சாலை வாடகை | 3,000 | |
| மின்சாரம் | 2,000 | |
| பொலிஸ் | 4,000 | |
| பிறசாதனங்கள் | 1,000 | |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | | 5,000 |

      1. மேலே உள்ள தகவல்களைப் பயன்படுத்தி கிரய அட்டவணை ஒன்றைத் தயார்செய்க.
      2. மேலுள்ள செலவுகளின் மூலம் ஜனவரி மாதத்தில் பாடசாலை ஆசிரியர் மேசைகள் 20 தயார் செய்யப்பட்டன எனக்கொண்டு ஓர் ஆசிரியர் மேசைக்கான கிரயத்தைக் காண்க.
      3. தொங்கல்கணக்கு என்றால் என்ன? தொங்கல் கணக்கொன்று எப்பொழுது திறக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடுக.
   4) சீவஷா வணிக நிறுவனத்தின் 2004.03.31இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது இணங்கவில்லை. இதற்கான காரணங்கள் கணக்காளரினால் கண்டு பிடிக்கப் பட்டன. அவை,
      1. மோட்டார்வாகனத் திருத்தச் செலவான 2,500 ரூபா மோட்டார் வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
      2. வங்கி நிலையான கட்டளைக்கு அமைய செலுத்திய வாடகைக்கட்டணம் 500 ரூபா தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.
      3. மின்சாரம் ரூபா 500 குறைவாக மின்சாரக்கணக்கில் பதியப்பட்டதுடன் பெற்ற கழிவுக்கணக்கில் ரூபா 500 குறைவாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.
      4. காப்புறுதிக்குச் செலுத்திய தொகையான 3,500 ரூபா தொலைபேசிக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
      5. விளம்பரத்திற்கு செலுத்திய 2000 ரூபா விளம்பரக்கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்தது.

07. குமார் முயற்சியாண்மையின் 31-12-2008 அன்று உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு:

| விவரம் | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மூலதனம் | | 200,000.00 |
| கொள்வனவு விற்பனை | 40,000.00 | 80,000.00 |
| கொடுத்தகழிவு | 1,000.00 | |
| தொக்குகள் (01-01-2008) | 30,000.00 | |
| காணிகட்டடங்கள் - கிரயத்தில் | 200,000.00 | |
| கடன்படுனர் | 8,000.00 | |
| கடன்கொடுநர் | | 2,000.00 |
| மின்சாரக்கட்டணம் | 3,000.00 | |
| மோட்டார் வாகனம் - கிரயத்தில் | 35,000.00 | |
| தளபாடமும் பொருத்தும் - கிரயத்தில் | 12,000.00 | |
| வாடகை | 4,000.00 | |
| விற்பனையாளர் சம்பளம் | 7,000.00 | |
| விளம்பரச்செலவீனம் | 1,500.00 | |
| பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு (01-01-2008) | | |
| காணிகட்டடம் | | 10,000.00 |
| மோட்டார் வாகனம் | 7,000.00 | |
| தளபாடமும் பொருத்துக்கள் | | 600.00 |
| 10% வங்கிக்கடன் | 10,000.00 | |
| 5% முதலீடுகள் | 15,000.00 | |
| நானாவித செலவுகள் | 2,000.00 | |
| தீயழிவு நட்டம் | 6,000.00 | |
| ஐயக்கடன் ஏற்பாடு (01-01-2008 ன்படி) | | 250.00 |
| எடுப்பனவுகள் | 4,000.00 | |
| வங்கிமீதி | | 77,150.00 |
| கைவசமுள்ள காசு 18500.00 | | |
| | 38,700.00 | 38,700.00 |

பின்வரும் தகவல்களைக் கருத்திற்கொள்க.
1) 31-12-2008 இல் தொக்குகள் ரூபா 25,000
2) நிலையான சொத்துக்களுக்கு வருடாந்த பெறுமானத்தேய்வு

| | | |
|---|---|---|
| காணிகட்டடம் | 10% | |
| மோட்டார் வாகனம் | 20% | |
| தளபாடமும் பொருத்தும் | 5% | (குன்றும் நிலுவை முறை) |

3) 31-12-2008 வரை செலுத்தப்படாதிருந்த மின்சாரப்பட்டியல் ரூபா 500 ஆகும்.
4) வாடகையில் 1,000 ரூபா 2009 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாகும்.
5) அறவிடமுடியாக்கடனாக 1,000 ரூபாவைப் பதிவளிப்பதுடன் ஐயக்கடன் ஏற்பாடானது கடன்பட்டோரில் 5% ஆக இருத்தல்வேண்டும்.
6) வங்கிக்கடனானது 01-07-2008 இல் பெறப்பட்டதாகும்.
7) நிறுவனத்தின் உரிமையாளர் 3,000 ரூபாவை எடுத்திருந்தபோதிலும் இதுபற்றி ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்:
அ. 31-12-2008 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கு.
ஆ. 31-12-2008 இல் உள்ளவாறான ஐந்தொகை.

-நிறைவுற்றது-

**ஆசிரியர் : திரு.N.ரதீசன்,**
**திருகோணமலை.**
**தொ.பே: 077-6636314**



**நாளைய வெளியீடு: கணிதம் (ஆசிரியர் திரு.S.சிவகாந்தன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org